
கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '99 ரூ. 6/-








"ஆத்துல விழுந்தும் என் நண்பன் தண்ணீரில் மூழ்கலே!"

"அவனுக்கு நீச்சல் தெரியுமோ?"

"ஊஹூம். அவன் பெயர் அந்'தோணி' ஆச்சே!"

– இரா. ஆதிநாராயணன்

எந்தப் பழம் கூடைக்குப் போகும்?




படத்தை நிறைவு செய்யுங்கள்!



பிருந்தாவனம்

விடை : 1



ஆகஸ்ட் '99
மலர் : 17 இதழ் : 7

கோகுலம்



அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

ஒரு போர் நம் மீது திணிக்கப்பட்டுள்ளது. நமது நேசக்கரத்தை ஏற்பது போல் பாசாங்கு செய்தவாறே பாகிஸ்தான் நமது முதுகில் குத்திவிட்டது! ஒருபுறம் நமது பிரதமர் வாஜ்பாயி லாகூருக்கு பஸ் பயணம் செய்தபோது அவருக்குத் தடபுடலான வரவேற்பு. அதே சமயம் ரகசியமாக காஷ்மீரத்துக்குள் போராளிகள் மற்றும் பாக் ராணுவத்தினரின் ஊடுருவல்!

இதன் சரித்திரப் பின்னணி என்ன? இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே சமயத்தில் சுதந்திரம் பெற்ற பிறகு காஷ்மீர மன்னர் தமது ராஜ்யத்தை இந்தியாவுடன் அதன் ஓர் அங்கமாக இணைத்து விட்டார். இதனை விரும்பாத பாகிஸ்தான் காஷ்மீரத்தின் மீது படையெடுத்து அதனை பலவந்தமாகக் கைப்பற்ற முயன்றது. இந்திய ராணுவம் எதிர்த்துப் போரிட்டது. ஒரு கட்டத்தில் ஐ.நா. சபை குறுக்கிட்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. போர் நின்றபோது எந்தப் பகுதி வரை பாகிஸ்தான் ஆக்கிரமித்திருந்ததோ அந்த எல்லை வரையறுக்கப்பட்டு 'கட்டுப்பாடு கோடு' என்று பெயர் பெற்றது. இருதரப்பினரும் இந்தக் கட்டுப்பாடுக் கோட்டை மீறலாகாது என்றது போர் நிறுத்த ஒப்பந்தம். இதனால் பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி அதற்குச் சொந்தமாகி விட்டதாக நாம் ஒப்புதல் அளித்து விடவில்லை. அதனை 'பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரம்' என்றுதான் அழைக்கிறோம். அதனை சமாதான முறையில் மீட்க நமது முயற்சியையும் கைவிடவில்லை.

இப்போது பாகிஸ்தான் இந்தக் கட்டுப்பாடு கோட்டையும் மீறி இந்திய எல்லைக்குள் ஊடுருவியதால் நாம் திருப்பித் தாக்கி, பாக் போராளிகளையும் பாக் ராணுவத்தினரையும் விரட்டி அடித்துக் கொண்டிருக்கிறோம். உலக நாடுகளின் அபிப்பிராயம் நமக்கு ஆதரவாக உள்ளது. இந்தப் போரின் போது நாம் கட்டுப்பாடு கோட்டைக் கடந்து போய் பாகிஸ்தானின் ராணுவ இலக்குகளையோ அல்லது 'சப்ளை லைன்'களையோ தாக்கவில்லை. கட்டுப்பாடு கோட்டுக் குள்ளேயே நமது ராணுவம் மட்டுமின்றி விமானப் படையும் செயலாற்றுகின்றது. இதனால் நமது பணி கஷ்டமாகிறது என்றாலும் படிப்படியாக வெற்றி பெற்று வருகிறோம்.

போரில் பல நூறு பேர் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். மேலும் பல நூறு பேர் காயமடைந்துள்ளார்கள்; ஊனமுற்றிருக்கிறார்கள். நமது தாய்நாட்டைக் காக்க இவர்கள் புரிந்துள்ள தியாகத்தைப் போற்றி நாம் தலைவணங்கினால் போதாது. நமது ராணுவத்தினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் நலனுக்காக அரசு நிதி திரட்டுகிறது. இந்த நிதிக்கு நம்மால் இயன்ற அளவில் பணம் அனுப்ப வேண்டும். நமது தேவைகளைக் குறைத்துக் கொண்டு கூட அனுப்பலாம். நமது நண்பர்களையும் உறவினரையும் வற்புறுத்தி இந்த நிதிக்கு பணம் அனுப்பச் செய்ய வேண்டும்.


'ஜெய் ஜவான்' என்று நாம் வாழ்த்துவது, இத்தகைய உதவியை நாம் செய்யும்போதுதான் உண்மையிலேயே அர்த்தமுடையதாக இருக்கும்.

அன்புடன்,

இ. ராஜேந்திரன்
ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்புவேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

கோகுலம் • ஆகஸ்ட் 1999 • இந்த இதழில்...








அட்டையில் : ராம்குமார்
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

நீங்களும் மாஜிக் செய்யலாம்!



கையில் ரத்தம்!

உங்கள் நண்பர்களிடம் கத்தியின்றி, காயமின்றி ரத்தத்தை வரவழைத்து ஆச்சரியப்பட வைக்க விரும்புகிறீர்களா? சரி. கீழுள்ள பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

1. வெள்ளைத் துணி
2. மஞ்சள் தூள்
3. சுண்ணாம்பு
4. தண்ணீர்

நீங்கள் மாஜிக் செய்து காட்டப்போவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பே வெள்ளைத் துணியை நனைத்து மஞ்சள் பூசி, மஞ்சள் துணியாக மாற்றிக் காய வைத்து எடுத்துக் கொள்ளுங்கள்.


சுண்ணாம்பைத் தண்ணீரில் கலந்து கைகளை நனைத்துக் கொள்ளுங்கள். (அதிகமாக சுண்ணாம்பு சேர்த்தால் கை வெந்து போகும் அபாயம் உண்டு.) எல்லாவற்றையும் தயார் செய்த பின்பே சுண்ணாம்பு நீரில் கைகளை நனைக்க வேண்டும். இல்லாவிட்டால் கை உலர்ந்து போய்விடும். சுண்ணாம்பைத் தண்ணீரில் கரைத்து நனைப்பதால் வெள்ளையாகத் தெரியாது. சாதாரண நீரில் கைகளை நனைத்தது போலவே இருக்கும்.

இனி மாஜிக் செய்ய ஆரம்பிக்கலாம். உங்கள் நண்பர்களிடம் கத்தியின்றி, காயமின்றி ரத்தத்தை வரவழைப்பதாகக் கூறுங்கள். அவர்கள் நம்ப மறுப்பார்கள். மஞ்சள் துணியை எடுத்து உள்ளங்கைகளால் தேயுங்கள். மஞ்சள் துணி சிவப்பு நிறமாகும். நம்ப மறுத்த நண்பர்கள் வாய் அடைத்துப் போவார்கள்!

காரணம் : மஞ்சளும் சுண்ணாம்பும் சேரும் போது வேதி வினை நடைபெற்று மஞ்சள் துணி சிவப்பாக மாறுகிறது.

கோகுலம் சுழல் கோப்பை!

சென்ற வருடம் கோகுலம் 'சுழல் கோப்பை' வத்தலகுண்டு பள்ளிக்கு வழங்கியது நினைவிருக்கும். இந்த ஆண்டு சென்னை, லால்பேட்டை, பெரியதச்சூர் பள்ளிகளுக்கிடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது. இப்போதும் கூட வாய்ப்பு உங்கள் பள்ளிக்கும் இருக்கிறது. உங்கள் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களின் படைப்புகளை கோகுலத்திற்கு அனுப்பி வையுங்கள். ஆண்டு இறுதியில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் கோகுலத்தில் அதிகம் இடம் பெற்றிருக்கிறதோ அப்பள்ளிக்கு கோப்பை வழங்கப்படும்.



கண்ணிலே நீர்

கண்ணிலே நீர் எதற்கு... என்று கேட்டால், 'அழுவதற்கு' என பதிலளிப்பீர்கள். சரி எதனால் அழுகிறோம்? கண்ணீரின் பயன் என்ன? துக்கமாகவும், வருத்தமாகவும் இருக்கும் போது மட்டும்தான், நாம் அழுவதாக நினைத்துக் கொண்டு இருக்கிறோம். அப்படியல்ல. நாம் ஒவ்வொருவரும், நம் வாழ்நாளில் உத்தேசமாக 2,50,00,000 முறை அழுகிறோம். அம்மாடியோவ்...! இத்தனை முறையா என்று வியந்து வாயடைத்துக் கண் விரியப் பார்க்கிறீர்களா?

நாடக மேடையில் திரையை ஏற்றி, இறக்குவது போல், நம் கண்களும் இமைத் திரையால் மூடித் திறக்கப்படுகின்றன. கண் மூடப்படுவதும் திறக்கப்படுவதும், நம் கண்ணிமைகளின் மேலுள்ள மடிக்கப்பட்ட தோலுக்கு கீழுள்ள தசைகள் இயக்கப்படுவதால்தான். இத்திரை மிக வேகமாக மூடித் திறப்பதால், நம் பார்வை பாதிக்கப்படுவதோ, தடைபடுவதோ இல்லை. இப்படியொரு செயல் நடைபெறுவதை நாம் உணர்வதும் இல்லை. நமக்குத் தெரியாமலேயே கண் திறந்து, மூடல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனை நாம் 'கண்சிமிட்டல்' என்கிறோம். நாம் ஆறு வினாடிக்கு ஒருமுறை கண் சிமிட்டுகிறோம்.

ஒவ்வொரு கண்ணிலும், மூக்கை ஒட்டிய பகுதியில், ஒரு கண்ணீர் சுரப்பி, கண்ணின் வெளி ஓரத்தில் இருக்கிறது. அதிலிருந்து வெளிவரும் குழாய்கள் மூலம் கண்ணீர், மேல் இமைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அங்கிருந்து சிறு சிறு கால்வாய்கள் மூலம் கண் முழுவதிலும் பரவுகிறது. ஒவ்வொருமுறை நாம் கண் சிமிட்டும் போதும் கண்ணீர் குழாய்களின் திறப்பு முனையில் தாக்கம் ஏற்பட்டுசிறிது திரவம் வெளியேறுகிறது. கண்ணீர் சுரப்பதன் நோக்கம் மனிதன் அழுவதற்கல்ல; கண்ணிற்குள் உள்ள 'கார்னியா' பகுதியை வறண்டு போகாமல் பாதுகாக்கவே! மிகச் சரியாகச் சொன்னால் ஒவ்வொரு முறை கண் மூடித் திறக்கும்போதும்







ஒரு சொட்டு கண்ணீர் விடுகிறோம். நாம் வாய் விட்டு அழும்போதும் இதுதானே நிகழ்கிறது!

எதற்கு?


எஸ். மோகனா

மனம் வேதனைப்பட்டு, கஷ்டப்பட்டு, அழும் போதும் கண்ணீர் வடிக்கிறோம்; குழந்தைகள் அடம் பிடித்து அழும்போது கண்ணீர் வருகின்றது. ஆனால் ரொம்பவும் சந்தோஷத்தில், வாய்விட்டுச் சிரிக்கும்போதும் கூட கண்ணீர் வருகின்றதே! இது எப்படி? நாம் வேகமாய் சத்தம் போட்டு 'ஹஹ்ஹா' என சிரிக்கும் போது, முகத்திலுள்ள 19 தசைகள் சுருங்கி, விரிந்து வேலை செய்கின்றன. கண்ணிலுள்ள தசைகள் கண்ணீர் சுரப்பிகளை நசுக்கி, நெருக்குகின்றன. எனவேதான் கண்ணீர் சுரப்பியில் சேமிக்கப்பட்டுள்ள கண்ணீர் வெளியேறி, கன்னத்தில் வழிந்தோட, அதனை 'ஆனந்தக் கண்ணீர்' என்கிறோம்.

நாம் வெங்காயம் உறிக்கும் போது கூட அழுகிறோமே! அது ஏன்? வெங்காயத்திலுள்ள புரோப்பேன் சல்போனிக் அமிலம் ஆவியாகி நம் கண்களில் பட்டு, கண்ணை உறுத்துவதால் கண்ணீர் விடுகிறோம். கண்ணீர் இவ்வேதிப் பொருளை, கண்ணிலிருந்து கழுவி வெளியேற்றி விடுகிறது. விறகு அடுப்பில் சமைக்கும் போது ஏற்படும் புகையும் கண்ணைப் பாதிப்பதால், கண்களிலிருந்து கண்ணீர் வெளியேறுகிறது. அப்போது அழுவதும் புகையை கண்ணிலிருந்து வெளியேற்றவே! எனவே இச்சமயங்களில் அழுவது, கண்களைப் பாதுகாக்கவும் சுத்தப்படுத்தவும் மட்டுமே!

அது சரி! நாம் வருத்தப்படும் போது ஏன் அழுகிறோம். மனிதன் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்த கண்ணீர் வடிக்கிறான். சில சமயங்களில் நாம் வளர்க்கும் வளர்ப்புப் பிராணிகளான நாய், மாடுகளும் கூட கண்ணீர் விடுகின்றன. மனிதன் ரொம்பவும் சிந்திப்பதாலும், உணர்ச்சி வசப்படுவதாலும் கண்ணீர் வடிகிறது. ஆனால் பிறந்த குழந்தை எத்தனை நேரம் கத்தினாலும் கண்ணீர் வருவதில்லை! ஏன் தெரியுமா? ஏனெனில் அவர்கள் நினைக்கவும், சிந்திக்கவும், உணர்ச்சிகளை வெளிக்காட்டவும் கற்றுக் கொள்ளவில்லை. இவைகளை குழந்தைகள் கற்றுக் கொண்ட பின்னரே கண்ணீர் விடுகின்றன. இது ஒரு மனோ ரீதியான செயல்பாடும் கூட. நாம் வார்த்தைகளால் விஷயங்களைச் சொல்ல முடியாத போது கண்ணீரை மொழியாக பிரயோகிக்கிறோம். மன உணர்வுகளைக் கொட்ட கண்ணீர் வடிகாலாகவும் பயன்படுகிறது.

புதிர் உலகம்!



I பழங்களின் எண்ணிக்கை எத்தனை?

மூன்று நண்பர்கள் பழங்கள் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றார்கள். ஒருவன் கொய்யாப் பழமும், மற்றவன் வாழைப் பழமும், மூன்றாமவன் மாம்பழமும் வாங்கினர்.

மூன்று பழங்களும் வெவ்வேறு விலை. நண்பர்கள் மூவரும் வெவ்வேறு எண்ணிக்கையில் பழங்கள் வாங்கிக் கொண்டனர். பழங்களுக்குரிய தொகையையும் கடைக்காரரிடம் கொடுத்தனர்.

மூன்று பேரும் சேர்ந்து வாங்கிய பழங்களின் மொத்த எண்ணிக்கை நூறு. அவர்கள் மூவரும் சேர்ந்து கடைக்காரரிடம் கொடுத்த ரூபாயும் நூறு.

ஒவ்வொரு பழமும் என்ன விலை வீதம் எத்தனை வாங்கியிருந்தால் நூறு பழங்களும், நூறு ரூபாயும் வரும்? எங்கே மூளையைக் கொஞ்சம் கசக்குங்கள்!

– என். ரம்யா,
மயிலாடுதுறை.

II எப்படி வரவழைப்பது?

1—லிருந்து *9* வரை உள்ள எண்களை மட்டும் எப்படி

விடைகள் :

I

பழங்கள்	ஒரு பழத்தின் விலை ரூ. பை.	எண்ணிக்கை	மொத்தத் தொகை ரூ. பை.
1. கொய்யாப் பழம்	0. 05	80	4.00
2. வாழைப் பழம்	1. 00	1	1.00
3. மாம்பழம்	5. 00	19	95.00
	மொத்தம்	100	100.00

வேண்டுமானாலும் பயன்படுத்தி 100 என்ற விடையை வரவழைக்க வேண்டும். எப்படி?

III எண் - 8 ஐ மட்டும் பயன்படுத்தி 1000 விடை வர வேண்டும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம்.

– ப. பஷாரத் பேகம், லால்பேட்டை.

IV தந்திரக் கணக்கு

வெளிநாட்டிலிருந்து சில அகதிகள் தமிழகத்திற்கு வந்தனர். சென்னையிலுள்ள கஸ்டம்ஸ் ஆபீஸர் அகதிகளின் தலைவனைப் பார்த்து எவ்வளவு பேர் தமிழகத்திற்கு வந்துள்ளீர்கள் எனக் கேட்டார். அதற்கு அவர் நாங்களும், எங்கள் அளவும், அதில் பாதியும், அதில் பாதியும் என்னையும் சேர்த்தால் 100 எனக் கூறினார். அகதிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட கஸ்டம்ஸ் ஆபீஸர் சிரமப்பட்டார். நீங்கள் உடனே விடையைக் கூறுங்கள் பார்க்கலாம்!

– சிவ. மணவழகி, திருச்சிற்றம்பலம்.

V கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள். இதற்கான விடைகள் 'ஆ' எழுத்திலேயே ஆரம்பிக்கின்றன.

1. ஔவையார் இயற்றிய பிரபலமான நூல்.
2. இதயத்தின் மேல் பகுதியிலுள்ள இரண்டு அறைகளின் பொதுப் பெயர்.
3. ஜவஹர்லால் நேருவை மக்கள் இப்படியும் அழைத்தனர்.
4. உலகிலேயே மிகவும் நீளமான மலைத் தொடர்.
5. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள உலகப் புகழ்பெற்ற மலைச் சிகரம்.
6. இருண்ட கண்டம் என்ற பெயர் பெற்ற கண்டம்.
7. உயிரினங்கள் உயிர்வாழ தேவையான வாயு.
8. இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர்.
9. ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்தியப் பெண்.

– க. கண்ணகி, திருப்பத்தூர்.

VI **'2521'** என்ற எண்ணை 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய எண்களால் வகுக்க கிடைக்கும் மீதி '1' வரும்.

இதே போன்று '2519' என்ற எண்ணை 10-ஆல் வகுக்க மீதி '9'. 9-ஆல் வகுக்க மீதி 8; 8-ஆல் வகுக்க மீதி 7; 7..... 2 ஆல் வகுக்க மீதி '1' வரும்.

– எஸ். நிரஞ்ஜனா, நீடாமங்கலம்.

II (9X8)+7+6+5+4+3+2+1=100.

III 888+88+8+8+8=1000.

IV அகதிகள் 36.

விளக்கம் :

நாங்களும்	- 36
எங்கள் அளவும்	- 36
அதில் பாதியும்	- 18
அதில் பாதியும்	- 9
என்னையும்	- 1
	100

V

1. ஆத்திச்சூடி
2. ஆரிக்கிள்
3. ஆசிய ஜோதி
4. ஆண்டிஸ்
5. ஆல்ப்ஸ்
6. ஆப்ரிக்கா
7. ஆக்ஸிஜன்
8. ஆலன் ஆக்டேவியன் ஹியூம்
9. ஆரதி குப்தா

கழுதை வரையுங்கள்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் கழுதை உருவாகி விடும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!


தலை மற்றும் காது : D7 → D5 → B3 → B6 → C8 → C12 → D13 → E13 → F12 → E11 → F10 → H10 → G8 → D7 → C8

உடல் மற்றும் இரு கால்கள்: D7 → N8 → P8 → T7 → W9 → W11 → V13 → W15 → W20 → V20 → V16 → S13 → Q15 → N15 → L13 → K15 → K20 → J20 → J13 → F10

மூன்றாவது கால்: L13 → L20 → M20 → M14

நான்காவது கால்: R14 → S15 → S20 → T20 → T14

வால்: W9 → X10 → X17 → X15 → Y17 → X15 → Y16



நன்றி: லிட்டில் ஆர்க்

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. 1330 குறட்பாக்களை இயற்றியவர் (5)

2. குரங்காட்டி குரங்கை வைத்து —— காட்டுவார் (3)

3. ஆகாயத் தோட்டி என்றழைக்கப்படும் பறவை (3)

7. மழை பொழியாமல், பயிர் விளையாமல் இருந்தால் இது ஏற்படும் (4)

11. கோள், கிழமை, உலோகம் —— இம் மூன்றும் ஒரே பெயரால் அழைக்கப்படுகின்றன.

வலமிருந்து இடம்

4. இந்தப் பயிரிலிருந்து கோணிகள், பைகள் தயாரிக்கப்படுகின்றன.

6. யானைகள் இவற்றிற்காக வேட்டையாடப் படுகின்றன (4)

9. பயிர்கள் விளையும் இடம் (3)

10. சுவர்களில் காணப்படும் பிராணி. பூச்சிகளைப் பிடித்துச் சாப்பிடும் (3)

12. பலவித பூக்கள் சேர்ந்தச் சரம் (5)

மேலிருந்து கீழ்

1. கல்கத்தா நகரம் மேற்கு —— மாநிலத்தில் உள்ளது (5)

2. ஏகலைவன் இவற்றில் ஒன்றை இழந்தான் (3)

8. துஷ்யந்தன் இதைத் தொலைத்ததால் சகுந்தலையை மறந்தான் (4)

9. முருகனின் மனைவி (3)

கீழிருந்து மேல்

4. கிராமங்களில் பொருட்கள் அனைத்தும் விற்கப்படும் இடம் —— (3)



5. இவர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் என்பார்கள் (4)

11. ஏப்ரல், மே மாதங்களில் இது அதிகம் (3)

12. சிறப்பு விருந்தினர்களை சிவப்பு வண்ண —— விரித்து வரவேற்பார்கள் (5)

— **பி. ரவிச்சந்திரன்,** பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்ணாகரம்.

விடை 61ஆம் பக்கம்

குழியில் விழுந்த யானைக்குட்டி!

பள்ளி விடுமுறையில் அமுதன் இளங்கோ, கண்ணன், முருகேசன், அகிலன் ஆகியோர் மலையடிவார அய்யனார் அருவியில் குளிக்க சைக்கிள்களில் வந்து இறங்கினார்கள்.

ஆதிவாசிகள் குடிசைகள் உள்ள இடத்திற்கு வந்து நீலனிடம் மலைக்கு மேலே சிறிது தூரம் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டனர்.

ஆதிவாசிச் சிறுவன் நீலன் "சாமி எங்க ஆத்தாவுக்கு உடம்பு சுகமில்லை. கஞ்சி காய்ச்சிக்கிட்டு இருக்கேன். கஞ்சியை ஆத்தாவுக்குத் தந்துட்டு நான் வரேன். நீங்க அருவிக்கு மேலே ஒத்தயடி பாதை வழியா போய்கிட்டு இருங்க. ஒண்ணும் பயமில்லை. நான் கொஞ்ச நேரத்துல வந்துடறேன்" என்றான்.

"சரி வேகமா வந்துரு" என்றவாறே அவர்கள் அருவிப்பக்கம் நடந்தனர்.

அருவியில் தண்ணீர் நிறையவே விழுந்து கொண்டிருந்தது. 'சோ'வென இரைச்சலுடன் ஆகாயத்திலிருந்து பால் கொட்டுவது போல் இருந்தது அந்தக் காட்சி.

"குளிச்சிட்டு போவோமே" என்றான் அமுதன்.

"வனக் காட்சிகளைப் பாத்துட்டு வரும் போது குளிக்கலாம்" என்றான் முருகேசன்.

"சரி" என்றவாறே நடந்தனர். மழைத் தண்ணீர் அரித்து விட்டதால் பாதை கற்களும் வேர்களுமாக கரடு முரடாக இருந்தது. இரண்டு பக்கமும் பச்சை மரங்கள் அடர்ந்து உள் வனம் தெரியாத அளவுக்கு இருந்தது. பாதை ஓரங்களில் இருந்த முள் கொடிகள் மேலே பட்டு விடாமல் அவர்கள் பார்த்து நடந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பக்கம் பள்ளத்தில் ஆறும் மறு பக்கம் செங்குத்தான மலையும். இடையில் ஒரு ஆள் மட்டுமே நடந்து செல்லும்படியான பாதை. அதன் வழி சென்றார்கள் அவர்கள்.

"தூரத்துல ஏதோ வர்ற மாதிரி தெரியுதே!" கண்ணன் கூறியதும் அவர்கள் நின்று பார்த்தார்கள்.

யானை ஒன்று மெல்ல அசைந்து நடந்து வந்து கொண்டிருந்தது.

"ஐயோ யானை வருதே! இப்ப என்ன செய்ய?" அகிலன் அலறினான்.

''ஏய் சத்தம் போடாதப்பா'' என்ற இளங்கோ ஓரத்திலுள்ள மரத்திற்கு அருகில் சென்றான். அது ஆலமரம். விழுதுகள் கீழே ஆற்றோரம் தரை வரை சென்றிருந்தன.

"எல்லோரும் ஓடி வாங்க. இந்த விழுது வழியா ஆத்தோரம் இறங்கிடலாம்'' என்றவாறே விழுதைப் பிடித்து அப்படியே 'சர்'ரென்று வழுக்கிக் கீழே சென்றான். மற்றவர்களும் அது போல விழுது வழியே கீழிறங்கி விட்டார்கள்.

அருகில் வந்து விட்ட யானை, பாதையில் நின்றவாறே பெரிதாக பிளிறியது. அவர்கள் பயந்து நடுங்கி கரையோரம் ஒதுங்கிக் கொண்டனர்.

யானை பெரிய கிளையை ஒடித்துக் கீழே போட்டது. அவர்கள் கரையில் ஒட்டி நின்றிருந்ததால் மேலே படாமல் தள்ளி விழுந்தது கிளை.

''யப்பா இது மேலே விழுந்திருந்தா எல்லோரும் நசுங்கி போயிருப்போம்" என்றான் அகிலன்.

"சரி இப்படியே கரையோட ஒட்டியே பேசாம இருங்க" என்றான் அமுதன்.

சத்தமிட்டவாறே யானை சென்று விட்டது.

'சாமி சாமி' என்ற சத்தத்துடன் நீலன் மேலே வந்து கொண்டிருந்தான். இவர்கள் இங்கிருந்து சத்தம் கொடுத்தார்கள்.

"அப்படியே மேற்கே வாங்க சாமி. கொஞ்ச தூரத்துல மரத்து வேர்கள் படிகள் மாதிரியிருக்கும். அது வழியா ஏறி மேலே வாங்க"

கொ. மா. கோதண்டம்

என்றதும் அவர்களும் அதேபோல் மேலே ஏறி வந்தனர்.

"ஆமா, ஏன் கீழே இறங்குனீங்க?'' நீலன் கேட்டான்.

"போப்பா பொழச்சது மறு பொழப்பு. யானை வந்துருச்சு. நாங்க ஆல மர விழுது வழியா கீழே இறங்கிட்டோம்'' என்று இளங்கோ கூறினான்.

"அட நல்ல வேளை. நாங்கூட அதைப் பார்க்கலியே."

"அப்படியே மேலே போயிருக்குமோ?"

"எங்கேயும் போகுது. வாங்க சாமி, கொஞ்ச தூரம் போயிட்டுத் திரும்பிடலாம்." அவர்கள் மேலே சென்றார்கள்.

பாதையில் நெல்லி மரங்கள் இருந்தன. நிறைய காய்த்துக் கிளைகள் தாழ்ந்து இருந்தன. கிளைகளை பிடித்து நீலன் உலுப்பினான்.

பெரிய காய்கள் சலசலவென கீழே விழுந்தன.

அவர்கள் அதை எடுத்துப் பைகளில் நிரப்பிக் கொண்டனர்.

"காய்கள் ரொம்ப ருசியா இருக்கே!"


"ஆமா, தண்ணி சாப்பிட்டா இப்ப தேனா இருக்கும்'' என்றான் நீலன்.

"வாங்க இந்தப் பக்கம் ஒரு ஊத்து இருக்கு அங்க தண்ணி குடிக்கலாம்."

சிறிது தூரத்தில் ஒரு ஊற்றிலிருந்து தண்ணீர் குபுகுபுவென சுரந்து வாய்க்காலாக ஓடி ஓடையில் விழுந்து கொண்டிருந்தது. அங்கே அவர்கள் தண்ணீர் குடித்தனர்.

ஏதோ சத்தம் கேட்கவே நீலன் உற்றுக்





''அவனுக்குப் பயங்கர வசதி!''

''அப்படியா?''

''அங்க பாரேன் அடுக்குப் புற்று கட்டி இருக்கான்!''

– சக்தி. சரவணன்

கேட்டான்.

"சாமி தூரத்துல குட்டி யானை அலர்ற சத்தம் கேட்குது. கொஞ்சம் இருங்க என் னன்னு பார்த்துட்டு வரேன்" என்று சென்ற வன் சிறிது தூரத்தில் சமவெளியில் நின்றவாறு இவர்களை அழைத்தான். இவர்கள் பயந்து கொண்டே சென்றனர்.

அங்கே ஒரு பள்ளத்தில் சகதியில் பாதி உடம்பு வெளியில் தெரிய பாதி உடம்பு சகதிக் குள்ளும் இருந்தபடி குட்டி யானை ஒன்று பெரி தாக அலறிக் கொண்டிருந்தது.

"சாமி இங்க புதை சேறு இருக்குது. அதுல குட்டி யானை இறங்கிடிச்சி. பள்ளம் ஆழம் அவ்வளவுதான். நாமளோ சின்ன மிருகங்களோ இதுல இறங்குனா சாக வேண்டியதுதான். இப்ப யானை இறங்கியிருக்கு. அது கீழேயும் மூழ்காது. இந்தச் சகதி பசை மாதிரி சொத சொதன்னு இருக்கும். காலைத்தூக்கி மேல வரவும் முடியாது. இது இப்படியே இருந்தா சாக வேண்டியதுதான்."

"சரி இப்ப நாம என்ன செய்ய?"

"சாமி ஒரு உசுரு ஆபத்துல இருக்கயில எப்படி சாமி பார்த்துட்டு சும்மா போறது?"

"யானைய நாம என்ன தூக்கி விடவா முடியும்?"

"இப்ப யானைதாம்பா எங்கள வெரட்டி யடிச்சு கொல்லப் பார்த்தது. யானையப் போயி காப்பாத்தனுங்கிறீயே?" என்றான் கண்ணன்.

"சாமி என்ன இருந்தாலும் இதை நாம காப்பாத்திட்டுதான் போகணும். நாம் மனுசங்க இல்லியா?"

"எப்படியப்பா நம்மால முடியும்?" என்று கேட்டான் அகிலன்.

"நீங்க படிச்ச புள்ளைங்க. யோசிச்சிப் பாருங்க. எப்படியும் ஒரு யோசனை வரும். நமக் கும் ஒரு உசுர காப்பாத்துன திருப்தி இருக்குமில்லே சாமி."

என்ன செய்வது என அவர்கள் யோசித் துக் கொண்டிருந்தனர். குட்டி யானையின் அல றல் அதிகமாகியது. நீலன் முகத்தில் ஒரு பிர காசம் தெரிந்தது.

"சாமி அதோ பாருங்க ஒரு பாறை."

அவர்கள் அங்கே பார்த்தனர். ஆற்றங் கரை யில் ஒரு பெரிய பாறை தெரிந்தது.

"ஆமாம், அதை என்ன செய்ய?"

"சாமி அந்தப் பாறை தொங்கல் ஒட்டுல தான் இருக்கு. நாம ஆறு பேரும் சேர்ந்து தள் ளுனா அது ஆத்துப் பள்ளத்துல விழுந்துரும்."

"சரி அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"சாமி நா போயி நீளமா படர்ந்திருக்கிற கொடிகளை அறுத்திட்டு வரேன். அதைக் கயிறா திரிச்சி யானை தும்பிக்கையில கட்டிரு வோம். அதுவும் நல்லா புடிச்சிக்கிரும். ஒரு முனைய அந்தப் பாறையில கட்டிருவோம். பாறைய தள்ளி விட்டா பாறை ஆத்துல போயி விழும். அப்ப யானையையும் தூக்கிட்டு வந் துருமில்ல."


நல்ல ஐடியாதான் என்று அவர்கள் ஒத்துக் கொண்டதும் நீலன் ஓடிச் சென்று நீளமான கொடிகளை அறுத்து வந்து கயிறு தயாரித்து ஒரு பக்கம் முடிச்சிட்டு மெல்ல யானைக் குட்டி அருகில் சென்றான். தரையில் நின்று கொண்டு அது நீட்டிய தும்பிக்கையில் கட்டி னான். மறுமுனையை பாறையில் கட்டியதும் அவர்கள் பாறையை சிரமப்பட்டு தள்ளி விட் டனர். பாறை மெல்ல 'டமடம'வென உருண்டு ஆற்றில் விழுந்தது. யானையும் சிறிது தூரம் மேலே இழுத்து வரப்பட்டது.

நீலன் மெல்லச் சென்று தும்பிக்கை கயிற்று முடிச்சுகளை அவிழ்த்து விட்டான்.

யானைக்குட்டி பிளிறியவாறே காட்டுக்குள் ஓடி விட்டது. குட்டியின் சத்தம் கேட்டு எங்கி ருந்தோ வந்த யானைக் கூட்டம் ஓடி வந்த குட்டியைப் பார்த்ததும் அதனை தும்பிக்கையால் தடவிக் கொடுத்தன.

நீலனும் மற்றவர்களும் வேகமாகக் கீழே இறங்கினார்கள்.

அவர்கள் முகத்தில்ஒரு யானையையே காப்பாற்றி விட்ட பெருமிதம் தெரிந்தது.



கோகுலத்துக்கு சந்தா செலுத்திவிட்டீர்களா?

வினித் கோகுலத்தின் வாசகன். ஏற்கனவே சந்தா செலுத்தி விட்டான். பிறகு எதற்கு இப்படி பறக்கிறான்? அவன் நண்பன் சதீஷ் பிறந்த நாளுக்கு கோகுலம் சந்தாவை அன்பளிப்பாகத் தருவதற்காகத்தான்! இவர்களைப் போல் உங்களுக்கும் கோகுலத்தைப் படிக்க ஆர்வம் இருக்கும். நீங்களும் சந்தா செலுத்தலாமே! அல்லது நீங்கள் ஏற்கெனவே சந்தாதாரராக இருந்தால் உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா செலுத்தலாமே!

பெயர் : ....


முகவரி : ....


....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.






முத்தையாவும் திருடனும்...

கதை : எம்.எஸ். உம்மு அம்மாரா
படம் : சுமன்

வெயில் நேரம். வழியில் மக்கள் நடமாட்டம் இல்லை. அப்போது முத்தையாவின் சைக்கிளை ஒருவன் தடுத்து நிறுத்தினான்.





“யார் நீ?” என்று கேட்டார் முத்தையா.


“கையில் இருக்கும் பணத்தை எடுத்துக் கொடு” என்றான் அத் திருடன்.

முத்தையா யோசித்தார். “என்ன யோசிக் கிறே? உயிர் மேல ஆசை இல்லையா?” என்று மிரட்டினான் திருடன்.





“ஐயா, இதுதான் என் கடைசி வியாபாரம். இனிமேல் என் மகன்தான் வியாபாரத்திற்குச் செல்வான். அதனால் இன்று சம்பாதிப்பதை ஒரு ஏழைக்குக் கொடுக்க நினைத்தேன். நீ கிடைச்சுட்டே” என்றார்.

“சரி. சீக்கிரம் கொடு” என்றான் திருடன்.




"ஆனால் ஒரு நிபந்தனை" என்றார் முத்தையா.
"என்ன?" என்றான் திருடன்.
"ஒரு நிமிஷம் செருப்பைக் கழற்றி விட்டு, கண்ணை மூடி சாமி கும்பிட்டால் பணத்தைத் தந்து விடுகிறேன்" என்றார் முத்தையா.





திருடன் செருப்பைக் கழற்றி விட்டு கண்களை மூடினான்.

உடனே முத்தையா தன்னிடமிருந்த பானையைத் தூக்கி திருடன் தலையில் கவிழ்த்தார். அவன் செருப்பைத் தூக்கிக் குப்பையில் எறிந்தார்.



அவ்வளவுதான்!
திருடன் தலையில் பானை கவிழ்ந்த வேதனையுடன் சுட்டெரிக்கும் வெயிலில் செருப்பில்லாமல் அலறினான்.
முத்தையா சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாகச் சென்றார்.

ஆடு, ஆடு...

விடுமுறை நேரம். நானும் என் தோழியும் ஆடு மேய்க்கச் சென்றோம். ஆடுகளை மேய விட்டு விட்டு ஒரு மரத்தடியில் படுத்து நன்றாகத் தூங்கி விட்டோம். திடீரென்று பக்கத்து வயல்காரர் "ஆடுமா, ஆடுமா" என்று கத்தினார். தூக்கத்திலிருந்து எழுந்த என் தோழி, "ஆடு, ஆடுங்கறீங்களே! திடீர்னு எப்படி ஆடுறது? எங்களுக்கு ஆடவும் தெரியாதே!" என்றாள். "உங்களை ஆடச் சொல்லலே, வயல்ல இறங்கிருச்சுப் பாருங்க உங்க ஆடுகள்" என்றார் கோபத்துடன். நானும் தோழியும் உடனே ஆடுகளைப் பிடித்து வந்தோம்.



– ம. சிவகங்கை, துத்திப்பட்டு, செஞ்சி மாவட்டம்.

எவ்வளவு?

நாங்கள் ஸ்வீட் ஸ்டால் வைத்திருக்கிறோம். படிக்கும் நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் நான் கடையில்தான் இருப்பேன். ஒரு நாள் நான் கடையை கவனித்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து "உப்பு பிஸ்கட் ஒண்ணு எவ்வளவு?" என்றார். அதற்கு நான் "ஒரு ரூபாய். மொத்தமாக வாங்கிக் கொள்ளுங்கள், உங்களுக்கு லாபம் வரும்" என்றேன். "எவ்வளவு ஆகும்?" என்று கேட்டார். நான் "நூறு பதினைந்து ரூபாய்" என்றேன். "ஒரு பிஸ்கட் ஒரு ரூபாய், நூறு பிஸ்கட் பதினைந்து ரூபாயா? எனக்கு எண்பத்தைந்து ரூபாய் லாபம்" என்றார் வியப்புடன். பிறகுதான் புரிந்தது நான் நூறு கிராம் என சொல்லாமல் நூறு என்று சொல்லி விட்டேன் என்று.





– ப. சாந்தி, கண்டாச்சிபுரம்.


மறதி!

என் தம்பிக்கு தினமும் பாடங்களை சொல்லிக் கொடுப்பேன். ஒரு நாள் முதல் நாள் சொல்லிக் கொடுத்த பாடத்திலிருந்து அவனிடம் கேள்வி கேட்டேன். "அவன் மறந்துட்டேன்" என்று வருத்தத்துடன் கூறினான். உடனே அருகில் இருந்த தாத்தா, "எழுபது வருஷத்துக்கு முன்னால வச்ச என் பெயரை நான் மறக்கலே. நேற்று படிச்ச பாடத்தை நீ மறந்துட்டே?" என்றார் தம்பியிடம். கோபப்பட்ட தம்பி "நீங்களாவது எழுபது வருஷத்துக்கு முன்பு வைத்த உங்க பெயரைத்தான் மறக்கல. நான் நூறு வருஷத்துக்கு முன்பு வைத்த உங்க அப்பா பேரையே ஞாபகம் வச்சிருக்கேனே!" என்றான். தாத்தா அமைதியாக இருந்தார்.

– மா. மகேஷ், தாரமங்கலம்.








எங்கள் ஊரில் நடந்தது!

மங்கலாக....

ஒரு நாள் இரவு நானும் அண்ணனும் தூங்கிக் கொண்டிருந்தோம். திடீரென்று அண்ணன் என்னை எழுப்பி, ''சீக்கிரமா என் கண்ணாடியை எடுத்துட்டு வா'' என்றான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''எதுக்கு இப்ப கண்ணாடி?'' என்றேன் நான். ''என் கனவில் ஒரு அதிசயமான பொருள் வந்தது. ஆனால் அது மங்கலாகத் தான் தெரிந்தது. கண்ணாடி போட்டால் தெளிவா தெரியுமேன்னுதான் கேட்டேன்'' என்றான். நான் வாய்விட்டுச் சிரித்தேன். உடனே வீட்டில் அனைவரும் எழுந்து வந்து விசாரித்தார்கள். விஷயத்தை அறிந்து அவர்களும் சிரித்தனர்.

– பா. ஆனந்த குமார், திண்டுக்கல்.



வீல்... வீல்....

நானும் தம்பியும் கடைக்குச் சென்றோம். நாங்கள் கேட்ட சாமான்களைக் கொடுத்தார் கடைக்காரர். கிளம்பும்போது என் தம்பி, ''அக்கா வீல் வாங்கலையே, எங்க வீல் கொடுங்க'' என்று கடைக்காரரிடம் கூறினான். அவர் எங்களைப் பார்த்து, ''வீல் வேணும்னா அடுத்த தெருவுல இருக்கிற சைக்கிள் கடைக்குப் போங்க'' என்றார். சற்று திகைத்த நாங்கள் ''நாங்க கேட்டது வீல் சோப்பு பவுடர்'' என்று கூறினோம். அவர் சிரித்தபடியே எடுத்துக் கொடுத்தார்.

– மகேஸ்வர மணி, சோழபுரம்.

அறிவில்லாதவன்

என் தங்கைக்கும் தம்பிக்கும் அடிக்கடி சண்டை வரும். ஒரு நாள் சண்டையின் போது தங்கை தம்பியைப் பார்த்து ''அறிவில்லாதவன்'' என்று திட்டினாள். உடனே தம்பி அழுது ரகளை செய்து அப்பாவிடம் சென்று முறையிட்டான். அப்பா தங்கையை அழைத்து ''அறிவில்லாதவன்னு சொன்னியா?'' என்று கேட்டார். ''ஆமாம். அறிவில் ஆதவன் அதாவது அறிவில் சூரியனைப் போல பிரகாசமுடையவன்னு சொன்னேன். தப்பாப்பா?'' என்று கேட்டாள் தங்கை. நான் அவளின் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தேன்.

– கி. ராஜசேகரன், இராஜபாளையம்.



எங்களுக்கு ஆடத் தெரியாது!

பரஞ்சோதி எதற்கெடுத்தாலும் சிக்கனம் பார்ப்பவர். அவரது மளிகைக் கடையில் வேலை செய்த பையன் திடீரென்று நின்று விட்டான்.

'உள்ளூரிலேயே ஒரு பணியாள் தேடினால் அடிக்கடி விடுப்பு எடுக்கலாம்; அடிக்கடி சம்பள உயர்வு கேட்கலாம். தினமும் இரவில் கொஞ்சம் மளிகை சாமான்களைத் திருடி விற்கலாம் அல்லது வீட்டுக்குக் கொண்டு போகலாம்' என்றெல்லாம் கவலைப்பட்டார். அவர் மனைவியும் அதை ஆமோதிக்கவே அவர் தாயார் வசிக்கும் கிராமத்துக்குச் சென்றார்.

அதிகம் படிக்காத, கொஞ்சம் அசடாக இருந்த சோணகிரியை அழைத்து வந்து வேலை கற்றுக் கொடுத்தார்.



வீடு முழுவதும் புகை


மாலதி

'மத்தியான நேரத்தில் ஓரிருவர்தான் சாமான் வாங்க வருவார்கள். அந்தச் சமயம் மனைவிக்கு உதவியாக இருக்கட்டும் என்று வீட்டிற்கு அனுப்புவார்.

ஒருநாள் அழுதுகொண்டே ஓடி வந்தான் சோணகிரி. பரஞ்சோதி பதற்றத்துடன், "என்னடா சோணகிரி?" என்று விசாரித்தார்.

"வீட்டுக்குள்ளே ஒரே புகைங்க... நுழையவே முடியாதபடி மூச்சு முட்டுது. முன்னே இப்படி இருந்துதான் எங்க பக்கத்து வீடு தீப்பிடிச்சு எரிஞ்சு போச்சு" என்று அழுதான் சோணகிரி.

கடையைப் பூட்டி விட்டு, ஓட்டமும் நடையுமாக ஓடி வந்தார் பரஞ்சோதி. வீட்டில் ஊரிலிருந்து மகள், மருமகன் குழந்தையோடு வந்திருந்ததால் ஒரே சிரிப்பும், கொண்டாட்டமுமாக இருந்தது.



"இதோ! மாமாவும் வந்துட்டாங்க" என்றார் மருமகன்.

"சோணகிரி வந்து வீட்டிலே ஒரே புகை; தீப்பிடிச்சுடும் போலிருக்குன்னான்" என்று அசடுவழிந்தார் பரஞ்சோதி. மனதுக்குள் பயங்கரக் கோபம்!

அவர் மனைவி விழுந்து விழுந்து சிரித்தார்.

''அந்த மடப்பய சொன்னதைக் கேட்டா ஓடி வந்தீங்க? வந்தது நல்லதாப் போச்சு! எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்! நம்ம பேத்திக்கு எண்ணெய் தேய்ச்சு நீராட்டினேன்! சாம்பிராணி போட்டா அபிராமி! திருஷ்டி வந்துடக் கூடாதேன்னு எல்லாரையும் உட்கார வைச்சு உப்பு, மிளகாய் சுத்திப் போட்டேன். ஈரக்கரி... சரியாப் பத்திக்காம புகை. அதைப் பார்த்துட்டு அவன்தான் உளறினான்னா...'' என்றார் அவர் மனைவி.

சோணகிரியை வாய்க்கு வந்தபடி திட்டினார் பரஞ்சோதி.

இன்னொரு நாள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். "மசாலாப் பொடியெல்லாம் போட்டு வெங்காய சாம்பார் பலே ஜோர்; பாயசம் சுமார்தான்" என்றார் மருமகன். ஒரு ஓரமாய் சோணகிரியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''அய்யா வந்தால் சாப்பாடு போடு; அடுத்த தெருவில் ஒரு வளைகாப்பு; நாங்க போயிருக்கோமின்னு ஐயாகிட்டே சொல்லு" என்று சோணகிரியிடம் சொல்லி விட்டு பரஞ்சோதியின் மனைவியும், மகளும் குழந்தையுடன் புறப்பட்டனர். மாப்பிள்ளை மாடிக்குச் சென்று தூங்கி விட்டார்.

சிறிது நேரத்தில் பரஞ்சோதி கடும் பசியுடன்

சாப்பிட வந்தார். சோணகிரி சோறும், கறியும் போட்டுக் குழம்பு ஊற்றினான். ஒரு கிண்ணத்தில் பாயசம் வைத்தான். ஆசையுடன் பாயசத்தைக் குடித்தவர் முகத்தைச் சுளித்தார்.

அதே நேரம் வெளியே போயிருந்த அவரது மனைவியும், மகளும் வந்தனர்.

"என்ன இது! பாயசம் என்கிறான்! உப்பும் காரமும், மசாலா வாசனையுமா இருக்கே? சாமானை இப்படித்தான் வீணடிப்பதா?" என்று கோபித்துக் கொண்டார் பரஞ்சோதி.

மனைவியும், மகளும் திருதிருவென விழிக்க, சோணகிரி, "போங்கய்யா! அம்மாவைக் கோவிச்சுக்காதீங்க! சாம்பார் நல்லாருக்கு; பாயசம் சுமார் என்று மாப்பிள்ளை ஐயா சொன்னாங்க! பாயசமும் ஜோராயிருக்கட்டும் என்று நான் தான் கொஞ்சம் சாம்பாரைக் கலந்தேன்! இப்போ சுமாராயிருக்கிற பாயசம் ரொம்பப் பிரமாதமாத்தானே இருக்கணும்! நீங்க பொய் சொல்றீங்க" என்றானே பார்க்கலாம்!

பரஞ்சோதி தலையில் கை வைத்துக் கொள்ள, மாடியிலிருந்து கேட்டுக் கொண்டே வந்த மருமகன் விழுந்து விழுந்து சிரித்தார்.

மறு வாரம், ஒரு மதிய வேளையில், "என்னடா, சாப்பிட்டியா, கடையைப் பார்த்துக்குறியா? நான் போய்ச் சாப்பிட்டு விட்டு வரட்டுமா?" என்று கேட்டார் பரஞ்சோதி.

"இப்போ போகாதீங்க! கொஞ்சம் பொறுத்துப் போங்க! அம்மா ரொம்ப சாம்பிராணி போடறாங்க போல..! படார் படார்னு வெடிக்கிற சத்தம் வருது! திருஷ்டியும் சுத்திப் போடறாங்கன்னு தோணுது. ஒரே புகை! மூச்சு முட்டிச்சு... புகை அடங்கட்டுமின்னு வந்துட்டேன். இன்னும் சாப்பிடலே" என்று சாவகாசமாகச் சொன்னான் சோணகிரி.

"பசி வயித்தைக் கிள்ளுதுடா; கடையைப் பூட்டிக்கிட்டு ரெண்டு பேருமே போய்ச் சாப்பிடலாம்! இவ ஒருத்தி! தினம் சுத்திப் போட அப்படியென்ன திருஷ்டி?" என்றபடி கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்கு நடந்தார்.

வீட்டின் முன் பெருங்கூட்டம் நிற்பது தெருமுனை திரும்பியதுமே தெரிந்தது. விரைந்து சென்றார். வாசல் திண்ணையில் மனைவி அழுது கொண்டிருந்தார்.

"சிக்கனம், சிக்கனமின்னு எல்லாம் உங்களாலே வந்தது. எத்தனை சாமான் எரிஞ்சு போச்சு பாருங்க! படிச்ச, புத்திசாலி வேலைக்காரனாக இருந்தா உடனே நெருப்பை அணைக்க உதவி இருப்பான்! அக்கம் பக்கத்துலே சொல்லி இருப்பான்!" என்று பரஞ்சோதியைப் பார்த்துக் கத்தினார்!

"சே! கொஞ்சம் கூட நன்றியில்லாதவங்க! சாம்பிராணிப் புகை வீணாத் தெருவிலே போகிறதேன்னு அக்கறையா கதவைத் தாள் போட்டுக்கிட்டுப் போயிருக்கேன்! ரெண்டு பேரும் எது செய்தாலும் என்னையே குற்றம் சொல்றீங்க! இனிமேல் இங்கே நான் வேலை செய்ய மாட்டேன்" என்று சொல்லி விட்டு வீறாப்பாக நடந்த சோணகிரியைப் பார்த்துத் திகைத்து நின்றார் பரஞ்சோதி!



"அமெரிக்காவில் 'கொஞ்சம் சிரிங்க'ன்னு சொன்னா, யாரும் சிரிக்க மாட்டாங்க. ஏன் தெரியுமா?"

"தெரியலையே!"

"அவங்களுக்குத்தான் தமிழ் தெரியாதே!"

— என். கார்த்திகேயன்



உங்கள் நூலகம்

கதாநாயகன் காக்கை, வில்லன்?

விளையாடி விட்டு வீடு திரும்பினான் குணா. விமலா கோபத்துடன், "குணா நீ போகும் போதே சீக்கிரம் வரச் சொன்னேனே மறந்துட்டியா?" என்றாள்.

"மன்னிச்சிடு விமலா. இதோ நொடியில் கிளம்பிடறேன். சேகரும் இப்ப வந்துடுவான், கோபப்படாதே" என்றபடி உள்ளே ஓடினான்.

சிறிது நேரத்தில் சேகர் வந்து சேர மூவரும் சிறுவர் புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடம் நோக்கி நடந்தனர்.

"சேகர்! சொல்ல மறந்துட்டேன். நீ நமது தேசியக் கொடியைப் பற்றி ஒரு கட்டுரை தயார் பண்ணணும்னு சொன்னியே. யதேச்சையா ஒரு புத்தகக் கடையில அதைப் பற்றிய ஒரு புத்தகம் பார்த்தேன். கே.ராமமூர்த்தி என்பவர் எழுதியிருக்கார்" என்றாள் விமலா.

"புத்தகத்துல எனக்குத் தேவையான தகவல் இருக்குதா?" என்றான் சேகர் ஆவல் பொங்க.

"ம். நமது தேசியக் கொடி எப்படி உருவானது, கொடியைப் பற்றிய தேசபக்தர்களின் கருத்துகள், கொடியின் படிப்படியான மாற்றங்கள், பல்வேறு கொடிகள் தோன்றியவிதம் என நிறைய தகவல்கள் இந்தப் புத்தகத்துலே இருக்கு. இன்னிக்குக் கண்காட்சியிலே இருந்தா வாங்கலாம்."

"அந்தப் புத்தகத்தை அன்னிக்கே வாங்கியிருக்கலாமே?" என்றான் சேகர்.

"பணம் எடுத்துட்டுப் போகலை. இன்னிக்கு வாங்கலாம். குணா நேற்று ஒரு புத்தகம் கொண்டு வந்தான். அதைப் பற்றி நீயே அவன்கிட்டே கேளு" என்றாள் விமலா.

"நம்ம மணிகிட்டேயிருந்து 'விரல் நுனியில் உபயோகமான செய்திகள்' என்ற புத்தகம் வாங்கினேன். ஆன்மீகம், விளையாட்டு, இலக்கியம் என பல பகுதிகளில் வியப்பான செய்திகள் இதில் இருக்குடா. நாளைக்கு உனக்குத் தரேன்" என்றான் குணா.

புத்தகக் கண்காட்சியை அடைந்தனர்.

"குணா, சேகர்! கூட்டத்தில் பத்திரமா இருங்க" என்றாள் விமலா.

எ. சோதி எழுதியுள்ள 'அறிவுள்ள காக்கை' என்ற புத்தகத்தை குணா எடுத்துப் பார்த்தான்.

"குணா அந்தப் புத்தகம் எங்கிட்ட இருக்குடா. இதுல காக்கைதான் கதாநாயகன், வில்லன் யார் தெரியுமா? நரி. உன் தம்பிக்குக் கூட நல்லாப் புரியும்" என்றான் சேகர்.


"இங்க வாங்க. கம்ப்யூட்டர் கிளாஸ் சேரப் போற உங்களுக்கு உதவியா இருக்கும் இந்தப் புத்தகம். சிலிக்கானிலிருந்து படிப் படியாக கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தி அதை எப்படி பயன்படுத்தணும்னு சொல்லியிருக்காங்க. இதைப் படிச்சாலே கம்ப்யூட்டர் பற்றிய அடிப்படை அறிவு நமக்குக் கிடைக்கும்னு நினைக்கிறேன். சரி, நான் வாங்கிட்டேன். நீங்களும் வாங்கியாச்சா? கிளம்பலாம், நேரமாச்சு" என்றபடி கண்காட்சியை விட்டு வெளியே வந்தாள் விமலா.

சேகரும் குணாவும் அவளைப் பின் தொடர்ந்து வெளியேறினார்கள்.

— ரே

* நமது தேசியக் கொடி, கே. ராமமூர்த்தி, பக். 112, ரூ. 20/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை -17
* அறிவுள்ள காக்கை, எ. சோதி, பக். 80, ரூ. 15/- நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த நகர், புதுச்சேரி.
* குழந்தைகளே கம்ப்யூட்டர் புரிந்து கொள்ளுங்கள், விஜயநிலா, பக். 128, ரூ. 43/-, இராமநாதன் பதிப்பகம், பிளாட் எண் 4698, ஏஏ-144, மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை - 40.
* விரல் நுனியில் உபயோகமான செய்திகள், பாரீஸ் பார்த்தசாரதி, பக். 168, ரூ.32/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.







செயற்கைப் பனிப்பாறை!

உண்மையில் ஐஸ் போலவே காணப்படும் செயற்கை பனிப் பாறைகளை பிளாஸ்டிக்கில் தயாரித்துள்ளது அமெரிக்காவில் உள்ள ஒரு பிளாரிடா நிறுவனம்.


இச் செயற்கைப் பனிக் கட்டிகளுக்கு 'ஆல்ட்ரோ ஐஸ்' என்று பெயரிட்டுள்ளனர். இப் பனிக் கட்டிகள் மூலம் கடுமையான வெயில் உள்ள பிரதேசங்களிலும் பனிச்சறுக்கு விளையாட்டு அரங்கத்தை நிறுவலாம். அவை இருபது ஆண்டுகள் தாக்குப் பிடிக்கும் என்று அதன் தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

நீர் மூழ்கிக் கப்பல்

நீர் பரப்பின் மேல் இருக்கும் நீர் மூழ்கிக் கப்பல் எப்படி நீருக்கடியில் செலுத்தப்படுகிறது?

கப்பல் நீருக்கடியில் மூழ்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் கப்பலின் எல்லாக் கதவுகளும் உடனடியாக மூடப்படும். அத்துடன் புறக்காட்சி கண்ணாடி அமைக்கப்பட்டிருக்கும் கோபுர வாசலும் அடைக்கப்படும்.

எல்லாவற்றையும் மூடிய பின் நீர்த் தொட்டிகள் திறக்கப்படுகின்றன. திறந்த தொட்டியில் கடல் நீர் நிரம்பியவுடன் கப்பலின் எடை அதிகரிக்க நீரில் மூழ்கத் தொடங்கும். கப்பலின் இருபுறமும் அமைக்கப்பட்டிருக்கும் சிறகு போன்ற அமைப்பு நீரில் உடனடியாக மூழ்க உதவிகரமாக இருக்கும்.



கப்பல் நீரில் மூழ்கும் சமயம் முன்புறம் தாழ்ந்தும், பின்புறம் உயர்ந்தும் நீரில் செல்ல ஏற்ற வகையில் இருக்கும்.

கப்பல் எவ்வளவு ஆழம் செல்ல வேண்டுமோ அந்த அளவுக்குத் தொட்டியில் நீர் நிரப்பப்பட்டுச் செயல்படும்.



பனிச் சிறுத்தைகள்

பனிச் சிறுத்தைகள் மற்ற சிறுத்தைகளைவிடப் பெரிதாக இருக்கும். ஆண் சிறுத்தை 110 பவுண்டும் பெண் சிறுத்தை இதைவிட 10 பவுண்ட் எடை குறைவாகவும் இருக்கும்.


இச் சிறுத்தைகள் அடிக்கடி நிறம் மாறும் தன்மை உடையன. சில மணி நேரம் வெளுப்பான மஞ்சள் கலந்த பழுப்பு நிறம், சில மணி நேரம் துருப் பிடித்த மங்கலான மஞ்சள் நிறம் என்று அடிக்கடி நிறங்கள் மாறும்.

சிறுத்தைக்கு முதல் எதிரி புலியாகும். சில நேரம் பசித்த புலியிடம் மாட்டிக் கொண்டால் புலியின் பசிக்கு சிறுத்தை இரையாகி விடும்!

ஆர்.ஆர். பூபதி, கள்ளிவாடி.

சூயிங்கம் எப்படி தயாராகிறது?

சபோடில்லா என்னும் மரத்திலிருந்து ஒருவகை ரப்பர் போன்ற திரவம் எடுக்கப்படுகிறது. அது தொழிற்சாலையில் சர்க்கரைப்பாகு, சோளப் பொரியிலிருந்து எடுக்கப்படும் பாகு இவற்றுடன் கலக்கப்பட்டு வாசனைத் திரவியங்கள் சேர்க்கப்படுகின்றன. மிக மிருதுவான சூயிங்கம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது.



ஆதாரம்: விந்தை மிகு விஞ்ஞானம்

தகவல்: ஜி.பி. ஜெயக்குமார்,
பத்தாம் வகுப்பு,
தேஜஸ்வல் மேல்நிலைப் பள்ளி,
குடியாத்தம்




- அலம்ப்ரா என்னும் அரண்மனை, ஸ்பெயின் நாட்டில் கிரானடா என்ற இடத்தில் உள்ளது.
- கென்சிங்டன் அரண்மனையில்தான் விக்டோரியா மகாராணி பிறந்தார்.
- செயின்ட் பால் கதீட்ரலை வடிவமைத்தவர் சர் கிறிஸ்டோபர் ரென் என்பவர்.
- மறக்கப்பட்ட சாம்ராஜ்யம் என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்ட சரித்திரப் பகுதி விஜயநகர சாம்ராஜ்யமாகும்.
- ஜைனர்களின் சலவைக்கல் கோவில்களுக்குச் சிறப்பு வாய்ந்த இடம் அபு மலைப் பகுதியாகும்.

- டி.என். பாஜு,
சென்னை - 36.

தாவரங்களில் மிக வேகமாக வளரக் கூடியது மூங்கில்தான். மூங்கில் ஒரு நாளைக்கு 45 சென்டி மீட்டர் என்ற அளவில் வளருகிறது. சாதாரணமாக மூங்கில் 32 வருடங்களுக்கு ஒருமுறை தான் பூக்கும். சில மூங்கில்கள் 60 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பூக்கும்.

ஆதாரம்: பொது அறிவுக் களஞ்சியம்

- சீர்காழி
தே. பவுராஜ்





பார்லிப் பூ!

உலகிலேயே மிகக் குறைந்த நேரம் மலர்ந்திருக்கும் பூ எது தெரியுமா? பார்லிச் செடியின் பூதான். அது இரண்டு அல்லது மூன்று நிமிடங்களேதான் மலர்ந்திருக்கும்!

- ரமா ராமநாதன், குமரி மாவட்டம்.

பாடும் பறவைகள்

இதை ஹம்மிங் பேர்ட்ஸ் என்கிறார்






கள். இதுவரை 320 வகையான பாடும் பறவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பறவைகள் ஓர் இடத்திலிருந்து மற்ற இடத்திற்குச் செல்ல 20 மணி நேரம் தொடர்ந்து பறக்கும். நீருக்குமேல் 800 கிமீ தூரம் பயணிக்கும்! இப்பறவை சிறிய வடிவில் இருக்கும். பறக்கும்போது நொடிக்கு 70 முறை இறக்கையை அடித்துக் கொள்ளும்.

- ஏ. கோவிந்தன், சேலம்.

ஜான் லோகி பெயர்டு



ஸ்காட்லாந்தில் உள்ள ஹெலன்ஸ் பார்க் என்னும் ஊரில் 1888 ஆம் ஆண்டு பிறந்தார் ஜான் லோகி பெயர்டு. பொறியாளராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் அத் தொழிலில் வெற்றி பெறவில்லை.

ரேடியோ அலைகள் மூலம் காட்சியையும் ஒலியையும் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்புதலில் ஈடுபட்டார். ஏராளமான பணத்தைச் செலவு செய்து புதுப்புது கருவிகளை உருவாக்குவதில் முயற்சி மேற்கொண்டார். இதன் விளைவாக 1926ல் தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டுபிடித்து உலகப் புகழ் பெற்றார்.

- ஜி.சி. இருதயனவன், ஆண்டியப்பனூர்.



இறக்கையில்லாத மிகச் சிறிய பூச்சி இனம் 'பேன்' தான்! மனிதர்களின் தலை முடியில் வாழும் பேன் இனத்திற்கு 'பெடிகுலஸ் ஹ்யூமனஸ்' என்றும், மிருகங்கள், பறவைகளிடம் வாழும் பேனுக்கு 'இஸ்சினோஸ் பிடுபில்' என்றும் பெயர் வழங்கப்படுகிறது. பேன் வகைகளில் 230 இனம் உள்ளன.

ஒரு பேன் ஒரு நாளில் பத்து முட்டைகள் வீதம் அதன் ஆயுளில் முன்னூறு முட்டைகள் இடுகின்றது. மனித உடலின் வெப்பத்தினால் பேன் முட்டை ஒரு வாரத்தில் குஞ்சாக வெளி வருகிறது. ஒரு பேன் சுமார் ஏழு வாரங்கள் வரை உயிர் வாழக் கூடியது.


பொது அறிவுக் குவியல் நூலிலிருந்து

- பி. இராமராஜன், பெருங்குறிச்சி.

சூப்பர் மேன் ஷேன் வார்ன்

● ஷேன் வார்ன் உலகின் சிறந்த ஸ்பின்னர்களில் ஒருவர்; பேட்ஸ்மேன்களை மிரட்டுபவர். உலகின் சிறந்த ஆறு பந்து வீச்சாளர்களில் இவரும் ஒருவர் என மைக்கேல்ஹோல்டிங் குறிப்பிடுகிறார். ஆனாலும் இந்தியாவிற்கு வந்தபோது இவரின் 'பாச்சா' பலிக்கவில்லை. இந்தியா டூர் மட்டுமல்ல– இந்த உலகக் கோப்பைத் தொடரிலும் கூடத்தான். ஜடேஜாவும், ராபின்சிங்கும் இவரது பந்துகளைப் பந்தாடினார்கள்.

● இந்தியர்களிடம் மிரண்டு போனாலும் கூட, தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான் அணிகளைக் கலங்கச் செய்தார். அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் ஆஸ்திரேலியா வெற்றி பெற ஷேன் வார்ன் பெரிதும் உதவினார். இரண்டு ஆட்டங்களிலும் ஆட்ட நாயகன் இவரே.



● இன்னொரு முக்கிய சாதனையையும் இந்த உலகக் கோப்பைத் தொடரில் ஷேன்வார்ன் செய்தார். ஒரே உலகக் கோப்பைத் தொடரில்அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இரண்டு நபர்களில் இவரும் ஒருவர். மற்றொருவர் நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் அலாட். இருவரும் இந்த உலகக் கோப்பைத் தொடரில்தான் இச்சாதனையை நிறைவு செய்தார்கள்.

உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டி நிறைவடைந்தவுடன், உலகிலேயே மிக அதிக அளவு மகிழ்ச்சியும் உற்சாகமும் உடையவராகத் திகழ்ந்தவர் ஷேன் வார்ன்தான். அவரது மகிழ்ச்சியும் ஆட்டத்திறனும் நீடிக்க நம் வாழ்த்துகள். எதிர்கால ஆஸ்திரேலியா காப்டன் இவர்தான்.

— விளையாட்டுப் பையன்

ஷேன் டேட்டா

ஒரு நாள் ஆட்டங்களில் எடுத்த விக்கெட்டுகள்: 197

சிறப்பான ஆட்டம்: 33 ரன்களுக்கு 5 விக்கெட்டுகள்.



எக்ஸ்பிரஸ் வேகத்தில் செல்கிறது!

✉ வாண்டுமாமா எழுதும் 'தங்கச் சிலை' தொடர்கதை முதல் அத்தியாயமே ராஜ்தானி ரயில் எக்ஸ்பிரஸ் வேகத்தில் விறுவிறுப்பாகச் செல்கிறது.

– செ. சரவணக்குமார்,
சாத்தூர்.

✉ என் தங்கையை கிரிக்கெட் விளையாடும்போது நான் சேர்த்துக் கொள்வதில்லை. கோகுலத்தைப் படித்ததும் 'என்னையும் சேர்க்க வேண்டும்' என்று மட்டையும் கையுமாக அழுதாள். சரி போனால் போகிறதென்று சேர்த்துக் கொண்டேன்.

– எம். ராஜசேகர்,
பத்தாம் வகுப்பு,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
திருச்சி

✉ மா, பலா, வாழை மூன்றும் இந்த சீசனில் கிடைக்கின்றன. இந்த முக்கனிகளின் சுவை போல் மூன்று படக்கதைகளும் நன்றாக இருந்தன.

– வி.பிரசன்னகுமார், மதுரை.

✉ புதிர், மாஜிக், விடுகதை பக்கங்களை நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிடுங்கள்.

– ஆர். நிர்மலா தேவி,
திருச்செந்தூர்.



✉ 'பிச்சைப் புகினும் கற்றல் நன்றே' என்று கூற்று உண்டு. ஆயினும் அத்தகைய அரிய கல்விச் செல்வத்தைத் தன்னுடைய சொந்த உழைப்பின் மூலம் மட்டுமே பெற வேண்டும் என்று நினைக்கும் தூயவன் எங்கள் மனதில் நிறைந்து நிற்கிறான். உழவுத் தொழிலின் சிறப்புகளை எடுத்துரைத்த 'கரன்சி சப்பாத்தி' என்ற கதை அருமை. இது போலவே குடிசைத் தொழில்களின் சிறப்பைக் கூறும் கதைகளையும் வெளியிடுங்கள்.

– சு. காத்யாயனி,
எட்டாம் வகுப்பு, புனித அலாய்சியஸ்
மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

✉ எங்கள் ஊர் கிராமம். கோகுலத்தைப் பற்றி இங்கு நான் கேள்வி பட்டதில்லை. சென்ற மாதம் ஒருநாள் கடலூர் செல்லும் வழியில் கோகுலத்தை ஒரு கடையில் கண்டேன். அதை வாங்கிப் படித்த எனக்கு மிகவும் பிடித்துப் போனது. அடுத்த கடிதத்தில் ஜோக் எழுதி அனுப்புகிறேன்.

– கே. வெங்கடேஷ்,
மேல்பட்டாம்பாக்கம், கடலூர் வழி.

✉ பிரச்சார வாடை சிறிதும் இன்றி கண் தானத்தின் அவசியத்தை சரியாக உணர்த்தியது 'தாத்தா வரப் போறார்' கதை.

– பி. வாணிஸ்ரீ,
எட்டாம் வகுப்பு, மேலூர்.

✉ தென் ஆப்பிரிக்க அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறாமல் தோற்றாலும்கூட அந்த அணியின் வீரர்களை சாதாரணமாக எடை போட முடியாது. அந்த வகையில் ஜாக் காலிஸை வண்ணத்தில் போட்டு பெருமைப் படுத்தியதற்கு நன்றி.

– எஸ். விவேக்,
பன்னிரெண்டாம் வகுப்பு, ஈரோடு.

✉ ஜூன் இதழின் நடுப்பக்கத்தில் வந்த பாடலும் சரி, படமும் சரி ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு அழகாக இருந்தன.

– ஜெ. அஸ்வத்,
ஏழாம் வகுப்பு, திண்டிவனம்.

கோகுலம் க்விஸ்



1. சிலப்பதி காரத்தை இயற்றியவர் ____

2. மனித உடலில் எத்தனை எலும்புகள் உள்ளன?

3. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள குகைக் கோயில்களின் பெயர் ________

4. நோபல் பரிசை இருமுறை பெற்ற பெண்மணி _________

5. தலையைத் தூக்காமல் நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை ____

6. சமீபத்தில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் அதிக ரன்களைக் குவித்தவர் ______

7. சிவப்பு கிரகம் என்று அழைக்கப்படும் கோள் _________

8. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வர கடல் வழியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் _____

9. வட அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய நன்னீர் ஏரி _________

10. தமிழ்நாட்டில் உப்பு சத்தியாகிரகம் நடந்த இடம் ____



இந்தப் பத்து கேள்விகளுக்கும் விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். சரியான விடைகளை எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியை எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி **31.8.99**

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97.



9 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: **விஜி** படம்: **லலிதா**




நாற்காலிகள்,
பாத்திரங்கள் எல்லாம்
இருக்கே!
மனிதர்களைத்
தான் காணோம்.
சரி. மிகவும்
களைப்படைந்து
இருக்கிறோம். சிறிது
நேரம் தூங்கலாம்.
சிறிது நேரத்தில் –
என்ன சத்தம்?
ஐயோ,
கோட்டையே அதிர்கிறதே!


ஒரு கொடூரமான அரக்கன் இறங்கி வருவதைப் பார்த்தவுடன் சிலர் மயங்கி விழுந்தனர்.
அரக்கன் ஒவ்வொருவரையும் தூக்கிப் பார்த்துக் கீழே போட்டான்.
ஐயோ.... அம்மா என்னை விட்டு விடு...
பிறகு ஒருவனை தூக்கிச் சென்றான்.
எல்லோரும் வசமாக மாட்டிக் கொண்டோம்.
ஐயோ, கடலில் மூழ்கி இறந்திருக் கலாமே!


தினமும் ஒரு ஆளை சாப்பிடுகிறான்.
இதற்கு முடிவு கட்ட வேண்டும்.
இந்த இரும்புக் கம்பிகளை பழுக்கக் காய்ச் சுங்கள்.
சிந்துபாத் ! கம்பி தயார்.
என்னுடன் மெதுவாக வாங்க.
ஊா!
சிந்துபாத் தூங்கிக் கொண்டிருந்த அரக்கனின் கண்களில் கம்பிகளைப் பாய்ச்சினான்.
— தொடரும்



2 தப்பினர்

கிமூட்டு மாமரத்தின் கீழ் நின்று கொண்டிருந்த மொட்டைத் தலையன், பங்களாவின் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த நித்யா - சத்யாவைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தபோது, அவன் மேல் வரிசைப் பற்களின் முன்னாலிருந்த ஒரு தங்கப் பல் பளபளத்தது. குழந்தைகள் இருவரும் படபடப்புடன் ஜன்னலின் கண்ணாடிக் கதவை மூடினார்கள். அவர்கள் உடல் நடுங்கியது.

"நாம் வசமா மாட்டிக்கிட்டோம் நித்யா. முன் வாசல்ல முஸ்தபா, இங்கே இந்த மொட்டைத் தலையன்! இன்னும் எங்கே யெல்லாம் எத்தனை தடியன்களை இந்த வீட்டைச் சுத்தி காவலுக்கு நிறுத்தி இருக்காளோ ஜெயராஜ்.." என்ற சத்யாவின் குரல் சுரத்தின்றி ஒலித்தது.

இடிந்து போய் சோபாவில் உட்கார்ந்திருந்த நித்யா ஈன சுரத்தில் கேட்டாள் - "இப்போ நாம் என்ன செய்யறது சத்யா?"

சிறிது நேரம் நெற்றிப் பொட்டை அழுத்தியபடி யோசனை செய்த சத்யா, தீர்மானமான குரலில் கூறினான் - "அப்பாவின் அட்வைஸ்படி நடக்க வேண்டியதுதான் நித்யா!"

குழப்பமுடன் தம்பியைப் பார்த்த நித்யா, '' புரியலையே சத்யா. அப்



வாண்டுமாமா

பாவை நாம் இன்னும் பார்க்கவே இல்லை. அவர் அட்வைஸ் எப்படி...?" என்று இழுக்க, தன் அக்காவை விஷமமாகப் பார்த்துச் சிரித்தான் தம்பி.

"நித்யா! நாம அப்பாவைச் சந்திக்கலேதான். ஆனா அவர் எழுதின கடிதத்தைப் படிச்சியே? அதிலே என்ன எழுதி இருக்கார்?– மறந்துட்டியா? 'சாமர்த்தியமாக நடந்து கொள்ளுங்கள்' - என்று ஞாபகம் வருதா?"

"ஆமா, ஞாபகமிருக்கு. ஆனா, சாதாரணமாகக் கூடச் சிந்திக்கத் தோன்றாத இந்தச் சூழ்நிலையில், எப்படி சாமர்த்தியமாக நடந்துக்கச் சிந்திக்க முடியும்?"

"இக்கட்டான வேளையில்தான் மனந் தளராமல் தைரியமாகச் செயல்படணும்னு நம்ம டாடி அடிக்கடி சொல்லுவாரே! அந்த இக்கட்டான வேளை இப்ப வந்திருக்கு. நாம் இந்தத் தடியன்களை முட்டாளாக்கிவிட்டு, இங்கிருந்து தப்பியாகணும்..." சத்யா இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாசல் கதவைத் திறந்து கொண்டு ஜெயராஜ் உள்ளே வந்தான். அவன் பார்வை நித்யாவையும் சத்யாவையும் ஊடுருவி நோட்டமிட்டன. "நீங்க இன்னும் ரெடியாகலியா?" என்று கேட்டான்.

"ஜெயராஜ் சார்! எங்களை எதுக்காக இங்கே கொண்டு வந்து சிறை வைச்சிருக்கீங்க?" என்று படபடத்தாள் நித்யா. "வாசல்ல முஸ்தபா, தோட்டத்திலே ஒரு மொட்டைத் தலையன். ரெண்டு பேர் கிட்டயும் துப்பாக்கி வேற..."

"எங்கிட்ட கூடத்தான் துப்பாக்கி இருக்கு!" என்று கிண்டலாகச் சிரித்தான் ஜெயராஜ். "ஆனால் துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டி இருக்காதுன்னு நெனைக்கிறேன். அதுவும் உங்களைப் போலப் புத்திசாலிக் குழந்தைங்ககிட்டே துப்பாக்கிக்கு வேலை இருக்காது."

"ஜெயராஜ் சார்! தயவு செய்து எங்களை எங்க அப்பாகிட்ட கூட்டிட்டுப் போங்க... ப்ளீஸ்!" என்றான் சத்யா கெஞ்சும் குரலில்.

அருகில் வந்த ஜெயராஜ் "உங்களை உங்க அப்பாகிட்டே கூட்டிட்டுப் போறேன். அதிலே ஒண்ணும் பிராப்ளம் இல்லே. ரொம்ப சிம்பிள் சமாச்சாரம். உங்க டாடி ரொம்பத் திறமையான எஞ்சினியர். துங்கபத்ரா நதியின் கானகப் பகுதியில் புதைந்துள்ள, பொக்கிஷத்தை வெளிக் கொண்டு வருவதற்கு, அந்த அசட்டுக் கிழத்துக்கு உதவி செய்ய வந்திருக்கார். பைத்தியக்காரத்தனம்!" என்றான் ஜெயராஜ் நக்கலாக.

"எது பைத்தியக்காரத்தனம்? புகழ் பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சிக்காரர் புண்ணியகோடிக்கு உதவுவதா பைத்தியக்காரத்தனம்? அவருக்கு உதவக் கொடுத்து வைத்திருக்கணும் சார்! எங்க டாடிக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது பெரும் பாக்கியமாக்கும்..." என்றான் சத்யா காட்டமாக.

"பறங்கிக்காய்!" என்று கூறி, கடகட வென்று சிரித்தான் ஜெயராஜ். "பாக்கியமாம் பாக்கியம்! யாருக்கு வேணும் பாக்கியமும் பாராட்டும் பப்ளிசிட்டியும்? பணம் வேணும் தம்பி, பணம்! பொன்

தங்கச்சிலை!

னையும் புதையலையும் நம்பி வாழ றவன்தான் புத்திசாலி, தெரிஞ்சுக்கோ! புண்ணியகோடிக்கு உதவினா என்ன கிடைக்கும்? ஐஞ்சாறு பத்திரிகையிலே உங்க அப்பாவோட போட்டோ வரும் – புரொ பசர் புண்ணிய கோடிக்குப் பக்கத்திலே சிரிச்சுக்கிட்டு நிக்கறாப்போல– அவ்வளவு தான். ஒரு மாசத்திலே ஜனங்க புண்ணிய கோடியையும் மோகனையும் மறந்துடுவாங்க. பொன்னும் புதையலும் அரசாங்க உடமை யாயிடும். தங்கத்தாலான சாமி சிலைகளை மியூசியத்திலே கண்ணாடிக் கூண்டுக்குள்ளே காட்சிப் பொருளா வைச்சுடுவாங்க. நீங்க எட்ட நின்னுதான் அதைப் பார்க்கணும். கிட்டப் போய் தொட்டுப் பார்க்கக் கூட முடியாது. உங்கப்பாவுக்கு டெல்லியிலே சொந்தமா வீடுகூடக் கிடையாது. கைக்கும் வாய்க்குமா வாழற சம்பாத்தியம். எனக்கு உதவு – உன்னை சொந்த பங்களாவிலே குந்த வைக்கிறேன்னா கேக்க மாட்டேங்கறார் உங்க அப்பா – அசட்டு மனுஷன்."

"புண்ணிய கோடியைப் பத்தி இப்படி யெல்லாம் கேவலமாகப் பேசாதீங்க, ஜெய ராஜ். அவர் பெரிய ஜீனியஸ்... புராதனப் பொருள்களை ஆராய்வதில்..."


"புடலங்கா...!" சத்யாவைப் பேச விடா மல் இடைமறித்தான் ஜெயராஜ். "ஆராய்ச் சியாலே யாருக்கு என்ன பலன்?"

"கடமையைச் செய்யும்போது பலனை எதிர்பார்க்கக் கூடாது. புதையலைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தது எப்படி? அவர் ஆராய்ச்சி செய்யாட்டி இந்த விஷயம் யாருக்குத் தெரியும்? நீங்க இப்போ அதிலே ஈடுபாடு காட்டறீங்களே அது எப்படி?"

"நகைச்சுவையான நீர் வீழ்ச்சி எது?"

"'ஜோக்' நீர்வீழ்ச்சிதான்."

– விநாயகன்



மடக்கினாள் நித்யா.

"அது நெசம்தான் பாப்பா, ஒத்துக்கறேன். ஆனா மனுஷன் பாடுபடறது சுகமாக வாழறதுக்குத்தானே? புதையலை வெளியே கொண்டு வரும் வரை புண்ணியகோடிக்கு உதவட்டும். அதன் பிறகு அந்தக் கிழத்தை ஒழிச்சுக்கட்டிட்டு, புதையலை சமமா பங்கு பிரிச்சுக்கலாம்னா – உங்கப்பா சம்மதிக்க மாட்டேங்கறாரு – பித்துக்குளி!"

"இந்த மோசடிக்கு நிச்சயம் எங்கப்பா ஒத்துக்க மாட்டார்" என்றாள் நித்யா.

"ஒத்துப்பாரு, ஒத்துக்கிட்டுத்தான் ஆக ணும்" என்றான் ஜெயராஜ் ஒரு வெறியோடு. "இந்தா பாரு பாப்பா! உங்க அப்பாவையும் அந்த அறிவு ஜீவியையும் காட்டுப் பகுதியில் உள்ள ஒரு ரகசியமான இடத்தில் கட்டுக் காவலோட வைச்சிருக்கேன். அவங்களை அங்கே கடத்திக்கிட்டுப் போறபோதுதான், உங்கப்பாவோட பர்சிலிருந்த கடிதத்திலே நீங்க இங்கே வரப் போற விஷயம் தெரிஞ் சுது. உங்க பாஷையிலே அதை வரப் பிர சாதம்னு சொல்லவா? மோகன்சார் உங்க மேலே உசிரையே வைச்சிருக்காருங் கறதையும் தெரிஞ்சுக்கிட்டேன். நீங்க என் கஸ்டடியில் இருக்கீங்க. அவர்கிட்ட சொல்லப் போறேன். இது முன்பே அவருக் குத் தெரியும்தான். உங்க போட்டோவையும் அந்தக் கடிதத்தையும் வாங்கினது பின்னே எப்படி? இப்ப சொல்லுங்க – அவர் என் விருப்பப்படி நடப்பாரா மாட்டாரா...?"

"நிச்சயம் நடக்க மாட்டார்!" என்றார்கள் நித்யாவும் சத்யாவும் கோரஸாக.

"அதையும் பார்த்துடலாம். உங்க உடலிலிருந்து ரத்தம் சிந்துவதை மோகன் சார் விரும்ப மாட்டாருன்னு நினைக்கறேன்" என்றான் ஜெயராஜ் குரூரமான சிரிப்புடன்.

"நீங்க என்ன சொல்ல வறீங்க...?"பீதியுடன் கேட்டாள் நித்யா.

"நீ படிக்கிற பொண்ணு, புத்திசாலிப் பொண்ணுங்கூட. நான் என்ன சொல் றேன்னு உனக்குப் புரியலியா? தமிழ்லே 'பிணைக் கைதி'ம்பாங்க இல்லியா? அதே தான் நீங்க. இன்னிக்கு மதியம் நாம் மலைக் குப் போறோம். நீங்க குஷியா விளையாட, பொழுது போக்க எல்லா வசதியும் அங்கே செஞ்சிருக்கேன். ஆனா தப்பியோடலாம்னு மட்டும் முயற்சிக்காதீங்க. அது முட்டாள் தனம். என் பிடியிலிருந்து யாராலும் தப்பிப் போக முடியாது. பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நான் கிளம்பறேன்.

உங்களை ரெடி பண்ண லக்ஷ்மி வருவா'' என்று கூறிவிட்டுக் கிளம்பினான் ஜெயராஜ்.

பேச்சற்று, விக்கித்துப் போன நித்யாவும் சத்யாவும் அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். ''இப்போ நாம் என்ன செய்யறது சத்யா?'' வறண்ட குரலில் கேட்டாள் நித்யா.

''இங்கிருந்து எப்படியாவது உடனே தப்பியாக வேண்டும்'' என்றான் சத்யா உறுதியான குரலில்.

''எப்படி...?''

சற்று யோசனைக்குப் பின், ''நாம் தப்பி விட்டதாக அவர்கள் நினைக்கும்படி ஏதாவது குழப்ப முண்டாக்கணும். காவல் கட்டுப்பாட்டின் கவனத்தைத் திசை திருப்ப அதுதான் ஒரே வழி...'' என்ற சத்யாவின் பார்வையில் திரைச்சீலை பட்டது. மின்சாரம் பாய்ந்ததுபோல சட்டென்று, ''அந்தத் திரைச்சீலைக்குப் பின்னால் போய் மறைந்து கொள்ளுவோம், வா. லக்ஷ்மி நம்மை இங்கு காணாமல் கூச்சல் போடுவாள். க்விக்! கர்ட்டனுக்குப் பின்னால் போ!'' என்று நித்யாவைத் துரிதப்படுத்தினான் சத்யா. அவர்கள் திரைச்சீலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்ட அதேவேளையில், லக்ஷ்மி பதறிப்போய், தெலுங்கில் ஏதோ கூவிக் கூச்சல் போட்டாள். வாசல் கதவைத் திறந்து கொண்டு முதலில் வந்தவன் முஸ்தபா. அடுத்து வந்தது ஜெயராஜ். ஆக்ரோஷமாகக் கூச்சல் போட்டான் அவன். காவல்காரர்களையும் பணியாளர்களையும் திட்டினான்.

பிணைக் கைதிகளான குழந்தைகள் தப்பி விட்டார்கள் என்ற பதட்டத்தில், யாருக்கும் திரைச்சீலையை விலக்கித் தேட வேண்டும் என்று தோன்றவில்லை. தோட்டத்தில் இங்குமங்கும் ஓடினார்கள்– தேடினார்கள்.

''சத்யா! உன் ஐடியா நல்லா வேலை செய்யுது!'' என்று நித்யா கிசுகிசுத்தாள்.

''இது போதாது. நாம் இங்கிருந்து வெளியேறும் வழியைப் பார்க்கணும்'' என்று ரகசியக் குரலில் கூறியபடி, மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு ஹாலுக்கு வந்தான் சத்யா. நித்யாவும் அவனைப் பின்பற்றினாள். ஹாலில் யாருமில்லை. தங்கள் டிராவல் பாக்குகளை இருவரும் எடுத்துக் கொண்டார்கள். வாசல் கதவின் வழியே எட்டிப் பார்த்தார்கள். முஸ்தபா இல்லை. தேடுபவர்களோடு சேர்ந்துகொண்டு அவனும் தோட்டத்துப் பக்கம் போயிருக்க வேண்டும்.



''வார நாட்களில் பழுதாகி, இற்றுப்போன நாள் எது?''

''தெரியலயே!''

''ஞாயிற்றுக்கிழமைதான்!''

– எஸ்.எஸ். மணியம்

நித்யாவும் சத்யாவும் மின்னல் வேகத்தில் காம்பவுண்ட் சுவரை நோக்கி ஓடினார்கள். செடிகளின் மறைவில் சற்றே நிதானித்து, யாராவது அந்தப் பக்கம் வருகிறார்களா என்று நோட்டமிட்டார்கள். வெளி வாசல் கேட் வாட்ச்மேன், யாரும் வெளியே போகவில்லை என்று உறுதி அளித்ததினாலும், குழந்தைகளால் அவ்வளவு எளிதில் வெளியேறி இருக்க முடியாது என்ற நம்பிக்கையினாலும், பங்களாவுக்குள்தான் எங்கோ பதுங்கி இருக்க வேண்டும் என்ற முடிவோடு எல்லோரும் காம்பவுண்டுக்குள்ளேயே, மூலை முடுக்குகளில் தேடிக் கொண்டிருந்தார்கள். நித்யாவுக்கும் சத்யாவுக்கும் இது வரப்பிரசாதமாக இருந்தது. இரும்புக் கேட்டின் குறுக்குக் கம்பிகளில் கால் பதித்து, சரசரவென்று மேலே ஏறி, மறு பக்கம் குதித்தார்கள். வீதியை நோக்கி ஓடினார்கள். பிரதான சாலையை அடைந்ததும், பார்ப்பவர் சந்தேகப்படாவண்ணம் ஓட்டத்தை மட்டுப்படுத்தி வேக நடை போட்டார்கள்.

''ஒரு வழியா அந்தப் பங்களாவிலிருந்து தப்பி வெளியே வந்தாச்சு'' என்றாள் நித்யா மூச்சு வாங்க, முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டே.

''அப்பா குறிப்பிட்டுள்ள அந்தப் புத்தகக் கடையைக் கண்டுபிடிக்கணும்... அதுதான் முதல் காரியம்'' என்றான் நித்யா.

''டவுன்ஹால் எங்கே இருக்கு – எப்படிப் போகணும்னு யார்கிட்டயாவது கேளு.''

''மெயின் ரோடிலேதான் டவுன்ஹால் இருக்கும். எதுக்கும் அந்த டீக்கடைக்காரரை விசாரிக்கிறேன்'' என்று கூறி, பாதையோரத்து டீ ஸ்டாலை நோக்கிப் போனான் சத்யா. சாலையின் இருபக்கத்தையும் நோட்ட

மிட்டாள் நித்யா - ஜெயராஜின் ஆட்கள் யாராவது தேடிக் கொண்டு வருகிறார்களா என்று. நல்லவேளை யாருமில்லை. டவுன்ஹால் போகும் வழியைத் தெரிந்து கொண்டு சத்யா அவளருகில் வந்தான். சாலையில் தனித்துப் போகாமல், கூட்டத் துடன் கலந்து வேகமாகவும், நிதானமாகவும் மாறி மாறி நடந்தார்கள். பசியும் களைப்பும் தலை தூக்கலாயின.

சிறிது நேரத்தில் நகரின் மத்தியப் பகுதியில் உள்ள சதுக்கத்தை அடைய, அங்கு கம்பீரமாக எழுந்து நின்ற ஒரு கட்டடத்தில் - 'டவுன்ஹால்' என்ற பெயர்ப் பலகை இவர்களை வரவேற்றது. அதன் வரவேற்பை அசட்டை செய்துவிட்டு, சதுக்கத்தில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளில் கவனம் செலுத்தினார்கள், நித்யாவும், சத்யாவும்.

''டவுன்ஹாலின் எதிரே என்றுதான் அப்பா, எழுதி இருக்கிறாரே சத்யா, அதோ பார்!'' என்று சுட்டினாள் நித்யா. ஒரு பெரிய ஜவுளிக்கடைக்கும் நகைக்கடைக்கும் நடுவில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தது 'தியாகி குமரன் புக்ஷாப்'! படபடத்தை வெளிப் படுத்தாமல் இருவரும் நிதானமாக நடந்து அந்தக் கடையை அடைந்தார்கள். கடையில் கூட்டமில்லை, அமைதியாக இருந்தது.

நித்யா தனக்குத் தெரிந்த அரைகுறைத் தெலுங்கில், கடையிலிருந்த விற்பனை யாளரிடம், ''புரொப்ரைட்டர் காரு உன்னாரா?' என்று கேட்டாள்.

கடையின் விற்பனையாளர் சிரித்துக் கொண்டே, "நீங்க சிரமப்பட்டு தெலுங்கிலே பேச வேண்டாம். உங்களைப் பார்த்தால் தமிழ்நாட்டுக் குழந்தைகளாத் தெரியுது. நீங்க தமிழிலே பேசலாம். இது தமிழரோட கடை தான்!'' என்று தாமிரபரணித் தமிழில் கூறினார்.

நித்யாவுக்கு வெட்கமாகி விட்டது. "நல்லது. நாங்க கடைமுதலாளியைப் பார்க் கணும்" என்றாள்.

"அரங்கநாதன் சாரைத்தானே? ஓ தாராள மாப் பார்க்கலாமே. என்னோடு வாங்க" என்று இருவரையும் கடையின் உட்பகுதிக்கு அழைத்துப் போனார் சேல்ஸ்மேன். 'ஆபீஸ்' என்று எழுதப்பட்டிருந்த ஒரு கதவைத் திறந்து, ''உள்ளே போங்க. முதலாளி இருக்காரு'' என்று கூறி அவர்களை உள்ளே அனுப்பிவிட்டு, கதவை மூடிக் கொண்டு கடையின் முன் பக்கத்துக்குப் போனார்.

தங்க பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி அணிந்த நடுத்தர வயது மனிதர் ஒருவர் மேஜை அருகில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தார். நெற்றியில் துல்லியமாகப் பளீரிட்டது முப்பட்டை விபூதி. அதன் நடுவே சந்தனப் பொட்டு. அதன் மீது குங் குமத்தின் ஜ்வலிப்பு. நாற்காலியின் பின்னால் மடித்துப் போடப்பட்டிருந்தது கதர் அங்க வஸ்திரம். தூய வெள்ளையில் முழுக்கை கதர்ச்சட்டை, வேஷ்டி அணிந்தவராக விளங்கினார் அரங்கநாதன்.


"நமஸ்காரம் சார்...!" என்றான் சத்யா.


குரல் கேட்டு நிமிர்ந்தவர் குழந்தைகள் இருவர் நிற்பதைப் பார்த்து, தான் பார்த்துக் கொண்டிருந்த கணக்கு நோட்டை மூடி விட்டு, முகம் மலர "வணக்கம்- வணக்கம்!" என்று கூறி நிமிர்ந்து அமர்ந்தபடி அவர் களை உற்றுக் கவனித்தார். ''உட்காருங்க" என்று உபசரித்து மேஜை முன்னாலிருந்த நாற்காலிகளைக் காட்டினார் கனிவோடு.

"நாங்க... உங்க நண்பர் மோகனோட குழந்தைகள். என் பேர் சத்யா. இவள் என் அக்கா - பேரு நித்யா...!" என்று தங்களை

ஓவியப் போட்டி

இந்த மாதத் தலைப்பு - வண்ண மீன்கள். நீங்கள் வரையும் படங்கள் படத்தில் காட்டியுள்ளபடி இருக்க வேண்டும் என்பதில்லை. தொட்டியில் வண்ண மீன்கள் இருப்பது போல் கூட வரையலாம். ஓவியங்கள் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் ஆறுதல் பரிசுகள் இரண்டும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள். கடைசி தேதி 20.8.99





கோகுலம் க்விஸ் முடிவு



இப்போட்டியில் கலந்து கொண்டவர்களில் பத்து பேரே சரியான விடைகளை அளித்துள்ளனர்.

ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :

1. ஹ. பாலு, போரூர்
2. பி.எம். சபீதா, எட்டாம் வகுப்பு, எஸ்.வி.எஸ். பள்ளி, திருச்சி
3. எஸ். பவித்ரா, திருச்சி
4. பி. ரவிச்சந்திரன், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்
5. ஆர். மாசிலாமணீஸ்வரி, சோழபுரம்
6. கே. இளங்கோவன், ஏரிக்கரை, தருமபுரி மாவட்டம்
7. அருணா கோபி, எட்டாம் வகுப்பு, அண்ணா ஆதர்ஷ் பள்ளி, அரும்பாக்கம், சென்னை
8. இரா. கோகுல், ஒன்பதாம் வகுப்பு, திசையன்விளை, நெல்லை மாவட்டம்.
9. ச. அரசி மேகலா, பத்தாம் வகுப்பு, ஒய்எம்சிஏ. மெட்ரிகுலேஷன் பள்ளி, திருச்சி
10. சி.எம். கார்த்திகேயன், எட்டாம் வகுப்பு, அம்மாபேட்டை, சேலம் மாவட்டம்.

சரியான விடை

1. மரபியலின் தந்தை கிரிகர் மெண்டல்.
2. உலகிலேயே இரண்டாவது சிறிய நாடு மொனாக்கோ.
3. இந்தியா கிரிக்கெட் போட்டியில் உலகக் கோப்பையை வாங்கிய ஆண்டு 1983.
4. நண்டு, மரவட்டை, கரப்பான் போன்றவைகள் கணுக்காலி தொகுதியைச் சேர்ந்தவை.
5. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் குருநானக்.
6. சூரியனைச் சுற்றி வரும் கோள்களில் பெரியது வியாழன்.
7. கிராமபோனைக் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன்.
8. மைசூரில் ஜோக் நீர் வீழ்ச்சி புகழ் பெற்றது
9. மிகச் சிறிய பறவை தேன் சிட்டு.
10. சாதாரண வெப்ப நிலையில் திரவ நிலையில் உள்ள உலோகம் பாதரசம்.

கோடை விடுமுறைப் போட்டி – II முடிவு

பழமொழிகளைக் கண்டுபிடியுங்கள்!

இந்தப் போட்டியில் உற்சாகத்துடன் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளையே தந்திருப்பதால் பரிசு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஆர். ஜான், உடுமலைப்பேட்டை
2. கு. அனிதா, ஆத்தூர்
3. ஜெ. மோனிகா, தாராபுரம், ஈரோடு மாவட்டம்
4. கௌ. சந்தோஷ்குமார், கல்பாக்கம்
5. ந. கலாமணி, குமாரபாளையம்
6. அ. ஹாஜா நூர்துலா, சங்கரன்பந்தல், நாகை மாவட்டம்
7. பி.டி. ஜூலி, விருதுநகர்
8. மு. கருப்பசாமி, ம. போத்தநதி, மதுரை மாவட்டம்
9. கே.எம்.பி. வைஜூர் நிஸா, பத்தாம் வகுப்பு, லெஷ்மாங்குடி
10. சி.எம். கார்த்திகேயன், எட்டாம் வகுப்பு, அம்மாபேட்டை, சேலம் மாவட்டம்
11. கே.ஒய். முகம்மது தஸ்நீம், பத்தாம் வகுப்பு, சமது மேல் நிலைப்பள்ளி, திருச்சி
12. பி.எஸ். ராமசாமி, நங்கநல்லூர், சென்னை
13. நா. வைகறைச் செல்வன், கீழ்ப்பட்டு, நீடாமங்கலம் தாலூகா
14. சி. சில்ஜா அஸ்னி, கன்னியாகுமரி மாவட்டம்
15. கே. வேங்கட கிருஷ்ணன், தேவகோட்டை
16. என். பிரேமா, ரெட்டிபாளையம், பாண்டிச்சேரி
17. அ. பிரசன்னா, ஐந்தாம் வகுப்பு, உடுமலைப்பேட்டை
18. ஆ. ப்ரியதர்ஷினி, காவேரிபட்டினம், தர்மபுரி மாவட்டம்
19. சுக. நிலா, காரைக்கால்
20. க. ராஜலெட்சுமி, ஆறாம் வகுப்பு, திருநெல்வேலி டவுன்

சரியான விடை

1. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
2. சிறு துளி பெரு வெள்ளம்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

உளறலால் அலறிய அங்குசாமி!



பேருந்து நிலையத்தில் ஒரு மூலையில் அமர்ந்து, "ஐயோ! என் பணம் போச்சே!" என்று அலறிக் கொண்டு இருந்தான் அங்குசாமி. அவனைச் சுற்றிக் கூட்டம் கூடியது. புலம்பல் சத்தம் கேட்ட ராஜசேகரனும் அங்கு சென்றான். அங்குசாமியும், ராஜசேகரனும் ஒரே ஊர்க்காரர்கள். அவனைச் சமாதானப் படுத்தி டீக்கடைக்கு அழைத்துச் சென்றான். டீ குடித்துக் கொண்டே நடந்ததைக் கூறினான், அங்குசாமி.

அங்குசாமி தன்னிடம் உள்ள பொருளை பலரிடமும் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்வான். அவன் பக்கத்து வீடான ராஜசேகரன் வீட்டில் டீ.வி. வாங்கி விட்டார்கள். உடனே தானும் வாங்க வேண்டும் என்று பண்ணையாரிடம் சென்று பத்தாயிரம் ரூபாயை கடன் பெற்றான். உடனே பேருந்தில் ஏறி நகரம் சென்றான். செய்தியை அவன் மனைவியிடம் கூடச் சொல்லவில்லை. நகரம் வந்தது. பேருந்து நிலையத்தில் பேருந்து நின்றதும் டீ.வி. வாங்க வேறு பேருந்து ஏறி அமர்ந்தான். கடை நகரத்தினுள் சற்றுத் தொலைவில் இருந்தது. பேருந்தில் அவன் அமர்ந்திருந்த இருக்கையில் வேறு இரு நபர்களும் வந்து அமர்ந்தனர். அவர்களிடம் அங்குசாமி பெருமையாகப் பேசத் தொடங்கினான். "என்னிடம் இப்ப இருபதாயிரம் ரூபாய் இருக்கு. கலர் டீ.வி வாங்கப் போறேன். எங்க ஊர்ல யாரிடமும் கலர் டீ.வி இல்ல" என்று பொய்த்தம்பட்டம் அடித்தான்.


பாவம்! அங்குசாமிக்கு நகரத்தில் நடக்கும் சூழ்ச்சிகள் தெரியாது. அருகில் இருந்தவன் பணத்தை பறிக்கத் திட்டமிட்டான்.

அப்போது அங்குசாமி "அப்பா! என்ன தாகம். எங்க போனா தண்ணீர் கிடைக்கும்?" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான். உடனே அருகில் இருந்தவனின் மனத்தில் 'பளிச்' என்று ஒரு யோசனை வந்தது. அவன் தன்னிடம் இருந்த துணிப்பையை அங்குசாமியிடம் கொடுத்துவிட்டு தண்ணீர் குடித்துவிட்டு வந்தான். அதைக் கண்ட அங்குசாமி அதே போல் தன் பணப்பையையும் அவன் துணிப்பையையும் கொடுத்துவிட்டு தண்ணீர் குடிக்கச் சென்றான். திரும்பி வரும்போது அவன் இல்லை. பத்தாயிரத்தோடு கிளம்பிவிட்டான். "இதன் பிறகு தான் நான் அலற நீ வந்தாய்!" என்று ராஜசேகரனிடம் அங்குசாமி கூறி முடித்தான்.

இப்பொழுது ஊருக்குச் செல்லக் கூட அங்குசாமியிடம் பணம் இல்லை. "இதன் பிறகுதான் இருவரும் காவல் துறையினரிடம் புகார் கொடுத்துவிட்டு தங்கள் ஊர் திரும்பினர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அங்குசாமி தற்பெருமை பேசும் பழக்கத்தை அறவே விட்டு விட்டான்.


– வெ.அ. கார்த்திகேயன், வெள்ளோடு.

கணுக்களும், மேலும் சில வற்றிற்கு 177 கணுக்களும் கூட உள்ளன.



• கடலில் வாழும் பெரிய நண்டுகளுக்கு ஐந்து ஜோடி கால்கள் உண்டு. பின்புறமுள்ள நான்கு ஜோடி கால்களையும் நடப்பதற்கு பயன்படுத்துகின்றன. முன் இரண்டு கால்கள் பெரியவை, வலிமையானவை. இக் கால்களால் இரையைப் பற்றி இறுக்கி உணவாக்கிக் கொள்கின்றன. இவை பெரிய அளவில் வேட்டையாடுவதில்லை. ஏனென்றால் இறந்து போன மீன்கள் மற்றும் கடல் வாழ் சிறிய உயிர்களையே இவை சாப்பிடுகின்றன. உணவுக்காக இரண்டு நண்டுகள் சண்டை போட்டுக் கொள்வதுண்டு.

• ஹெர்மிட் கிராப் என்று அழைக்கப்படும் நண்டுகள் மற்ற நண்டுகளை விட வித்தியாசமானவை. இவற்றின் முன் பகுதி ஓடுகள் உறுதியாக இருந்தாலும் பின் பகுதி மிகவும் மென்மையாக இருக்கும். எனவே பின் பகுதியை





அதிசயக் கிளி!

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் நான்காவது கதை

எழிலரசி, தமிழரசி, வானதி மூவரும் சகோதரிகள். பெற்றோர் இல்லை. வயதான பாட்டிதான் இவர்களை வளர்த்து வந்தார்.

எழிலரசியும் தமிழரசியும் சற்று மாநிறமாக இருந்தாலும் அழகாக இருப்பார்கள். இருவருக்கும் தங்கள் அழகில் கர்வம் அதிகம். ஆனால் கடைசிப் பெண் வானதியோ கறுப்பு நிறத்துடன் சுமாராகக் காட்சியளிப்பாள். எனவே வானதியின் அக்காக்கள் இருவரும் அவளை எப்பொழுதும் கேலி செய்து கொண்டும், கடினமான வேலைகளைச் செய்யச் சொல்லிக் கொண்டும் இருப்பார்கள்.

ஒரு நாள் சமைக்க விறகு இல்லை என்று வானதியை காட்டிற்குச் சென்று விறகு கொண்டு வருமாறு அனுப்பி வைத்தனர் எழிலரசியும் தமிழரசியும்.

வானதி தன் நிலையை எண்ணி வருந்தியபடி சென்றாள். தாகம் எடுத்தது. அருகிலிருந்த குளத்தில் தண்ணீர் குடித்து விட்டு வேகமாக விறகு வெட்டினாள்.

அப்போது ஏதோ பறவை வேதனையுடன் கத்தும் சத்தம் கேட்டது. வானதி இங்கும் அங்கும் தேடினாள். சிறிது தூரத்தில் ஒரு கிளி தரையில் காயத்துடன் விழுந்து கிடந்தது. வானதி ஓடிப் போய் கிளியைத் தூக்கினாள்.

அருகிலிருந்த குளத்தில் தண்ணீர் எடுத்து வந்து காயத்தைச் சுத்தப்படுத்தினாள். பிறகுதான் கவனித்தாள் கிளியின் ஒருகால் உடைந்திருந்தது. கிளியைப் படுக்க வைத்து விட்டு மூலிகைச் செடியைப் பறித்து வந்து காயத்திற்கு மருந்திட்டாள்.

'இனி கிளி பிழைத்துக் கொள்ளும்' என மனதிற்குள் சொல்லிக் கொண்ட வானதி நேரமாகி விட்டதை அப்போதுதான் உணர்ந்தாள்.

"ஐயோ! அக்காக்கள் இருவரும் என்னைத் திட்டப் போகிறார்களே! என்ன செய்வேன்?" என வாய் விட்டுப் புலம்பினாள்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கிளி வானதியை அழைத்தது.

கிளி பேசுவதைக் கண்ட வானதிக்கு ஒரே வியப்பாக இருந்தது.

கிளி மீண்டும் பேச ஆரம்பித்தது. "வானதி நீ எனக்குச் செய்த உதவியை நான் மறக்க மாட்டேன். என்னிடம் அபூர்வ சக்தி உண்டு. உனக்கு என்ன விருப்பமோ அதைத் தாராளமாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்" என்றது கிளி.

"கிளியே உன் பேச்சு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் நான் செய்த உதவிக்கு எந்த பிரதிபலனும் தேவையில்லை. என்னை மன்னித்து விடு" என்றாள் வானதி.

"உன் நல்ல குணத்தை நினைத்துப் பெருமைப்படுகிறேன். உன் வேதனை எனக்குத் தெரியும். இந்த நிமிடத்திலிருந்து நீ அழகு தேவதையாகக் காட்சி தருவாய். நீ வீட்டிற்குச் செல் அங்கு விறகு இருக்கும்" என்று கூறி பறந்தது கிளி.

வானதி மகிழ்ச்சியுடன் வீட்டை அடைந்தாள். எழிலரசியும் தமிழரசியும் திகைத்தனர். வானதி நடந்த நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் கூறி முடித்தாள்.

எழிலரசிக்கும் தமிழரசிக்கும் தங்களை விட அழகான வானதியைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

மறுநாள் இருவரும் கிளியைத் தேடிக்

இரா. அகிலா

காட்டிற்குச் சென்றனர்.

காட்டில் எங்கு தேடியும் கிளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் வருத்தத்துடன் வீட்டிற்குத் திரும்பும் நேரத்தில் மாமரத்தில் ஒரு கிளி அமர்ந்து பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

"எழில் அக்கா, இதுதான் அதிசயக் கிளியாக இருக்கும்" என்றாள் தமிழரசி மகிழ்ச்சியுடன்.

"சே, சே! இது அதிசயக் கிளியாக இருக்க வாய்ப்பே இல்லை. அது பொன்னால் ஆன கிளியாக இருக்கும் என்றே நினைக்கிறேன்" என்றாள் எழிலரசி.

"எதற்கும் அந்தக் கிளியிடமே பேசிப் பார்க்கலாமே?" என்றாள் தமிழரசி.

எழிலரசியும் அதை ஆமோதித்தாள். உடனே, "ஏய் கிளியே! நீதான் அதிசயக் கிளியா?" என்றாள் தமிழரசி.

கிளி அமைதியாகப் பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. பொறுமை இழந்த இருவரும் ஒரு குச்சியை எடுத்து கிளி மீது வீசினர்.

குச்சி கிளியின் முகத்தில் பட்டு ரத்தம் வெளிவந்தது. கோபம் கொண்ட கிளி, "இந்த நிமிடம் முதல் அழகற்று அசிங்கமாக தோற்ற மளிப்பீர்கள்" என்று கூறியது.

உடனே இருவரும் தங்கள் அழகை இழந்தனர். "ஐயோ! அதிசயக் கிளி எனத் தெரியாமல் இப்படி செய்து விட்டோம். எங்களை மன்னித்துப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து விடு" என்று கண்ணீர் மல்கக் கூறினர்.

கிளிக்கு இரக்கம் ஏற்பட்டது. "வரும் அமாவாசையன்று இருவரும் பழைய நிலையை அடைவீர்கள்" என்று கூறி பறந்து சென்றது.


இருவரும் அழுதபடி வீட்டை அடைந்தனர். வீடு பூட்டியிருந்தது. அருகில் உள்ளவர்களிடம் விசாரித்தனர்.

பக்கத்து நாட்டு இளவரசன் வானதியை திருமணம் செய்து கொள்ள அழைத்துச் சென்றிருப்பதாகக் கூறினர்.

"வானதி மீது பொறாமைபட்ட நமக்கு இந்தத் தண்டனை அவசியம்தான்" என்றாள் எழிலரசி.

"வரும் அமாவாசைக்கு மறுநாள் வானதியைப் பார்த்து மன்னிப்புக் கேட்கலாம்" என்றாள் தமிழரசி.

இருவரும் அமாவாசையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.





முதல் பரிசு

எம்.எஸ். சுகந்தி,
ஒன்பதாம் வகுப்பு,
சைதாப்பேட்டை, சென்னை

இரண்டாம் பரிசு

என்.எஸ். கோபால்,
பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி,
ராஜாநகரம் கிழக்கு, திருவள்ளூர் மாவட்டம்.




ஓவியப் போட்டி முடிவுகள்

ஜூன் இதழில் 'விமானம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

மூன்றாம் பரிசு

கே.கே. ஸ்ரீராம்,
கோவை.




ஆறுதல் பரிசுகள்



யோ. கார்த்திகா,
ஒன்பதாம் வகுப்பு, ஓடப்பள்ளி, ஈரோடு. ↑

எம்.எஸ். கோபிராமராஜ்,
பத்தாம் வகுப்பு, குடவாசல் அஞ்சல், சீர்காழி. ↓



கேட்கட்டுமா டாக்டர்?

தூக்கத்தில் நடந்து செல்வது ஏன்?

டாக்டர் கு. கணேசன்

● **ப. சந்திரன், தக்கலை.**

? கொசு நம்மைக் கடித்தவுடன் கடித்த இடம் வீங்கி விடுகிறதே, ஏன்?

! கொசு நம்மைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சும் போது ரத்தம் உறையாமலிருக்க, ஒரு திரவத்தைத் துப்புகிறது. அத்திரவம் நம் உடலுக்கு ஓர் அந்நியப் பொருள் என்பதால், அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, எதிர்ப்புத் தெரிவிக்கிறது நம் உடல். இதன் விளைவாக தோலில் இருக்கும் 'மாஸ்ட்' அணுக்களிலிருந்து (Mast Cells) ஹிஸ்டமின் என்ற பொருள் வெளிவருகிறது. இதனால் கொசுக் கடித்த இடத்தில் அரிப்பு ஏற்படுகிறது. அதே சமயம் தோலில் இருக்கும் தந்துகிகளிலிருந்து பிளாஸ்மா வெளியேறுகிறது. இது கொசுக் கடித்த இடத்தில் சிறு பனித்துளி போல் திரள்கிறது. இதுதான் அந்த இடம் வீங்குவதற்குக் காரணமாகிறது.

● **எம்.எம். ஆனந்தன், வந்தவாசி.**


? இளம்பிள்ளை வாதம், மூட்டு வாதம், பக்கவாதம் இந்த மூன்றுக்கும் என்ன வேறுபாடு, டாக்டர்?

! இளம்பிள்ளை வாதம் (Poliomyelitis). இது வைரஸ் கிருமிகளால் ஏற்படுவது, நரம்புகளைப் பாதிப்பது, உறுப்பு செயலிழப்பது. குழந்தைகளைத் தாக்கும் நோய் இது. மூட்டு வாதம் (Osteo Arthritis) என்பது எலும்புகளில் உண்டாகின்ற அழற்சி நிலையைக் குறிப்பது. மூட்டு வீக்கம், மூட்டு வலி இந்த நோயின் முக்கிய அறிகுறிகள். பெரியவர்களுக்கே இது அதிக தொல்லை கொடுக்கும். மூளையில் ஏதேனும் ஒரு பக்கத்தில் ரத்தநாளம் அடைத்து விட்டால் அல்லது வெடித்து விட்டால், அந்த இடம் பழுதடைந்து, செயலிழக்கும். இதன் விளைவாக உடலின் எதிர்ப் பக்கத்தில் உள்ள கை, கால் செயலிழந்து போகும். இதைப் பக்கவாதம் (Paralysis அல்லது Stroke) என்கிறோம். இதுவும் ஒரு முதியோர் நோய்தான்.

● **த. பாலகிருஷ்ணன், செம்பனார்கோவில்.**

? டாக்டர், எனக்கு அடிக்கடி வாந்தி வருகிறது. சரியாக சாப்பிட முடியவில்லை. இதற்கு என்ன காரணம்?

! இரைப்பையில் புண் இருந்தால் அடிக்கடி வாந்தி வருவதற்கு அதிக வாய்ப்புண்டு. உங்கள் குடும்ப மருத்துவரின் நேரடி ஆலோசனையின் பேரில் மருந்து சாப்பிடுங்கள். விரைவில் குணமடைவீர்கள்.



● **த. பரதன், மன்னார்குடி.**

? உடல் வலிக்கு சிலர் படுத்துக் கொண்டு ஒரு சிறுவனை கால்கள், முதுகில் ஏறி நின்று கொண்டு அமுக்கச் சொல்கிறார்களே, இப்படிச் செய்வது தவறில்லையா, டாக்டர்?

! நிச்சயமாகத் தவறுதான், பரதன். உடல் வலி, முதுகு வலி போன்ற தொந்தரவுகளைச் சரி செய்ய சிலர் இவ்வாறு உடல் தசைகளை அமுக்கி விடச் சொல்கிறார்கள். இதனால் கழுத்து வலி போய் திருகுவலி வந்த கதை


தான் பெரும்பாலும் ஏற்படும். மாறாக, உடல் வலியைப் போக்க முறைப்படி மசாஜ் செய்ய வேண்டும் அல்லது இயன்முறை மருத்துவத்தைப் (Physiotherapy) பின்பற்ற வேண்டும். இரண்டும் இயலாவிட்டால் தினமும் அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்தால் எல்லா வலிகளும் மறைந்து போகும்.





● சிவகண்மணி, கருப்பம்புலம்.

? என் அக்கா அடிக்கடி பாக்கு தின்கிறாள். இது நல்லதா, டாக்டர்?



! பாக்கு தின்பது நல்லதில்லை சிவகண்மணி. வாயில் புற்றுநோய் வருவதற்கு அது பாதை அமைத்து விடும். வாய்ப்புண், ரத்த சோகை, பல்வலி என்று பல தொல்லைகள் ஏற்படும். உன் அக்காவிடம் இவற்றை எடுத்துச் சொல்.





● குருசிகாமணி, பெரும்பத்தூர்.

? ஒரு சிலர் தூக்கத்தில் நடந்து செல்கிறார்களே, எப்படி டாக்டர்?

! தூக்கத்தில் நடக்கும் பழக்கம் (Somnambulism) ஒருவித மன நோயின் வெளிப்பாடு. இது கனவு நிலையில் சாத்தியப்படுகிறது. எப்படி கனவு என்பது நம் ஆழ்மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆசைகளின் வடிகாலாக அமைகிறதோ, அவ்வாறே நம் ஆழ்மனதில் நீண்ட காலமாகப் பதிந்திருக்கும் கசப்பான அனுபவங்கள், எண்ணங்கள், ஆசைகள், ஆவேசங்கள் போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிதான், தூக்க நடை. தூக்கத்தின்போது கனவுக்கு அடுத்த கட்டமாக தூக்க நடை அமையும். தூக்கத்தில் நடப்பதற்கும் அந்த நேரத்தில் அவர் காணும் கனவுக்கும் நிறைய தொடர்புண்டு. கனவில் தோன்றும் உணர்வுகளுக்கு ஏற்ப அவர் அசைவு கொடுக்கிறார்; மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாத சில வார்த்தைகளையோ, வாக்கியங்களையோ சொல்வார். எழுந்து நடப்பார்; தண்ணீர் குடிப்பார்; கதவைத் தட்டுவார். எல்லாம் ஓரிரு நிமிடங்களுக்குத்தான். அதற்குள் அவர் சுய உணர்வுக்கு வந்து விடுவார். ஆனால், அவர் தூக்கத்தில் நடந்தது, கதவைத் தட்டியது அவருக்கு மறந்து விடும், கனவு மாதிரி!

நரியின் பேராசை!

அமைப்பு :
சார்லசு


படம் :
சசி




சந்திரகிரி காட்டில் ஒரு நரி வசித்து வந்தது. அது ஏமாற்றி உணவு சாப்பிடும் வழக்கம் உடையது.




ஒரு நாள் நரியின் செயலால் கோபம் அடைந்த காட்டு விலங்குகள் நரியைக் காட்டை விட்டே துரத்தின.




காட்டை விட்டு வெளியே வந்த நரி ஒரு கிராமத்தை அடைந்தது. அப்போது நரியின் காலில் பெரிய முள் ஒன்று குத்தியது.




ஓடிவந்த களைப்பினாலும் முள் குத்திய வேதனையாலும் அப்படியே சாலை ஓரம் படுத்தது.




அந்த வழியே ஒரு முட்டை வியாபாரி வந்தார். அவரிடம் ''ஐயா, என் காலில் குத்திய முள்ளை எடுத்து விடுங்கள்'' என்றது நரி.




இரக்கப்பட்ட முட்டை வியாபாரி முள்ளை எடுத்து வீசினார். கூடையில் இருந்த முட்டையைப் பார்த்த நரிக்கு நாவில் நீர் ஊறியது. உடனே தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது.




''என் காலில் குத்திய முள்ளைத் தா'' என்றது நரி. ''உனக்கெதுக்கு முள்? அதைத்தான் வீசி விட்டேனே'' என்றார் வியாபாரி.




''எனக்கு முள்ளுக்குப் பதில் ஒரு முட்டையைக் கொடு'' என்றது நரி.



நரியிடம் பேசிப் பலனில்லை என்ற முடிவுக்கு வந்த வியாபாரி ஒரு முட்டையைக் கொடுத்து விட்டு வேகமாகச் சென்றார்.




முட்டையுடன் நடந்த நரி வழியில் ஒரு பாட்டியின் குடிசையைக் கண்டது.




''பாட்டி! இன்றிரவு இங்கு தங்க அனுமதிக்கணும்'' என்றது நரி. பாட்டியும் சம்மதித்தார்.



''இந்த முட்டையைப் பத்திரமாக வைத்திருங்கள். காலையில் வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறியது நரி.




முட்டையை வாங்கி வைத்துவிட்டுப் பாட்டி தூங்கினார்.



இரவு மெதுவாக எழுந்து சென்று முட்டையைக் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டது நரி.



பொழுது விடிந்ததும், "பாட்டி நான் கிளம்பறேன்; முட்டையை எடு" என்றது நரி. பாட்டி இங்கும் அங்கும் தேடினார். கிடைக்கவில்லை.



''என் முட்டையைச் சாப்பிட்டு விட்டாயா? என் முட்டையை வைத்து விட்டு மறுவேலை பார்'' என்று கத்தியது நரி.



"எங்கிட்ட இப்ப முட்டை இல்லை. இந்தக் கோழிக் குஞ்சை வைத்துக் கொள்" என்றார் பாட்டி.



நரி மகிழ்ச்சியுடன் பக்கத்து ஊரை அடைந்தது. அங்கு ஒரு தாத்தா ஆட்டுப் பண்ணை வைத்திருந்தார்.



“ஐயா, நான் சிறிது ஓய்வெடுக்கிறேன். அது வரை இந்தக் கோழிக் குஞ்சை பத்திரமாக வைத்திருங்கள்” என்றது நரி.



தாத்தா கோழிக் குஞ்சை வைத்துவிட்டு உள்ளே சென்றார். நரி, கோழிக் குஞ்சை லபக்கென்று விழுங்கி விட்டு மீண்டும் படுத்துக் கொண்டது.



திரும்பி வந்த தாத்தாவிடம் “கோழிக் குஞ்சைத் தந்தீங்கன்னா நான் கிளம்புவேன்” என்றது நரி.



கோழிக் குஞ்சு இல்லாததைக் கண்ட தாத்தா குழம்பினார். “உன் ஆடுகள் என் கோழிக் குஞ்சை சாப்பிட்டு விட்டதோ?” என்றது நரி.



“ஆடுகள் கோழியைச் சாப்பிடுமா?” என்றார் தாத்தா. “என் கோழிக் குஞ்சைத் தா, இல்லைன்னா உன் ஆட்டுக் குட்டியைத் தா” என்றது நரி.




தாத்தாவிற்கு நரியின் திட்டம் புரிந்தது. கோணியுடன் வந்தார். “இந்தா ஆட்டுக்குட்டி. ஓடிப் போ” என்றார்.



‘சுலபமாக ஏமாந்து விட்டார்’ என நினைத்தபடி நரி மகிழ்ச்சி பொங்க நடந்தது.



“குட்டி கேட்டால் கொழுத்த ஆடே உள்ளே இருக்கும் போலிருக்கே” என்று வியந்தபடி கோணியை அவிழ்த்தது.



உள்ளேயிருந்து வேட்டை நாய் ஒன்று சீறிப் பாய்ந்தது. நரி பயந்து போய் திரும்பிப் பார்க்காமல் ஓடியது.





புத்திசாலி எறும்புகள்!

இனிப்புப் பண்டங்களை சரியாக மூடாமல் விட்டு விடுங்கள். சில மணி நேரம் கழித்து நீங்கள் பண்டத்தை எடுக்க நினைக்கும்போது அது மாயமாய் மறைந்து போயிருக்கும்! இந்த மந்திர வித்தையைச் செய்பவர்கள் எறும்புகளே!

நம் கைப்பட்டாலே இறந்து விடக்கூடிய எறும்புகள் நம் காதிற்குள் புகுந்தால்? அவ்வளவுதான்!

பூச்சி இனங்களில் எறும்புதான் அறிவு மிக்கது. இவற்றில் சுமார் 8,000 வகைகள் உள்ளன. உலகம் முழுவதும் எறும்புகள் வாழ்கின்றன.

எறும்புகளால் தனித்தனியாக வாழ இயலாது. சுற்றம் சூழ பெருங்கூட்டமாகவே வாழக்கூடியவை.



தேனீக்களைப் போலவே எறும்பு சமூகத்திலும் மூன்று வகை எறும்புகள் உள்ளன. ராணி எறும்பு, ஆண் எறும்புகள், வேலைக்கார எறும்புகள் ஆகும்.



ஒரு கூட்டில் ஒரே ஒரு ராணி எறும்பு தான் இருக்கும். அத்துடன் சில ஆண் எறும்புகளும் ஏராளமான வேலைக்கார




எறும்புகளும் இருக்கும். வேலைக்கார எறும்புகள் அனைத்தும் பெண் எறும்புகள்தான். பெண் எறும்புகள் அதிகமிருந்தாலும் அவை முட்டை இடுவதில்லை. ராணி எறும்பு மட்டுமே முட்டை இடும். ராணி மற்ற எறும்புகளை விட உருவத்தில் பெரியதாக இருக்கும். ராணி எறும்புக்கும் ஆண் எறும்புகளுக்கும் ஆரம்பத்தில் இறக்கைகள் இருக்கும். பிறகு உதிர்ந்து விடும்.

வேலைக்கார எறும்புகளின் பணி மகத்தானது. இவை மட்டும்தான் எல்லா வேலைகளையும் பகிர்ந்து கொண்டு செய்யக்கூடியவை. வேலைக்கார எறும்புகளில் சில இரை தேடும்; சில கூட்டில் இருந்து ராணியையும்



எறும்புகளின் கண்கள் பல கண்கள் ஒன்று சேர்ந்த கூட்டுக் கண்களாகும். இவற்றால் நன்றாகப் பார்க்க இயலாது. ஆனால் இவை தங்களின் உணர்வு இழைகளால் மோப்பம் பிடித்து வழியை அறிந்து கொள்கின்றன. இந்த உணர் இழைகள் மூலம் எறும்புகள் ஒன்றோடொன்று விஷயங்களைப் பரிமாறிக் கொள்





கின்றன.


வேலைக்கார எறும்புகளுக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒரு பையில்

குஞ்சுகளையும் பாதுகாக்கும்; சில எறும்புகள் எதிரிகள் கூட்டிற்குள் நுழைந்து விடாதபடி காவல்காக்கும்.

முட்டை இடும் பருவத்தில் ராணி எறும்பு ஆயிரக் கணக்கில் முட்டைகளை இட்டுக் கொண்டிருக்கும். வேலைக்கார எறும்புகள் ஒவ்வொன்றும் ஒரு முட்டையை எடுத்துச் சென்று பராமரிக்கும்.

முட்டைகள் லார்வா, பியூப்பா, முதிர் பருவம் போன்ற நிலைகளைக் கடந்து குஞ்சாக வெளிவருகின்றன. குஞ்சுகள் தானாக வேலை செய்ய ஆரம்பிக்கும் வரை முதிர்ந்த வேலைக்கார எறும்புகள் உணவூட்டி நன்றாக கவனித்துக் கொள்கின்றன.

எஸ். சுஜாதா





தனக்குத் தேவையான உணவை நிரப்பிக் கொள்கின்றன. மற்றொரு பையில் உணவை நிரப்பிக் கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன.

எறும்புகளுக்குத் தாடைகள் உண்டு. இத் தாடைகளின் உதவியால்தான் நம்மை நறுக் கென்று கடித்து விடுகின்றன. சிற்றெறும்பு, கட்டெறும்பு, முசிறு எறும்பு போன்றவை நம்மைத் தாடைகளால் கடிக்கக்கூடியவை. நம் வீடுகளில் காணப்படும் கறுப்பு எறும்பு (பிள்ளையார் எறும்பு) கடிக்காது.

பொதுவாக எறும்புகள் பூமிக்கு அடியிலேயே கூடுகளைக் கட்டுகின்றன. சில வகை எறும்புகள் மட்டும் உயர்ந்த மரங்களில் கூடுகளை உருவாக்குகின்றன.

கூடுகள் விசாலமானதாக இருக்கும். ராணி எறும்பு தங்க ஓர் அறை, மற்ற எறும்புகளுக்குத் தனி அறை, முட்டைகளுக்கு, குஞ்சுகளுக்கு, உணவு சேமித்து வைப்பதற்கு என வசதியாக இடங்கள் பிரிக்கப்பட்டிருக்கும்.

அசுகுணி என்ற ஒரு வகைப் பூச்சியை எறும்புகள் கூட்டிற்குக் கொண்டு வந்து வளர்க்கின்றன. வளர்ச்சியடைந்த அசுகுணி பூச்சியை எறும்புகள் தொடும்போது அதிலிருந்து இனிப்பான நீர் சுரக்கும். இதனை எறும்புகள் விரும்பிக் குடிக்கின்றன.

சில எறும்புகள் கூடுகளில் தோட்டங்களை வளர்க்கின்றன. இலைகளைமென்று ஒரு அறையில் உமிழ்ந்து பரப்பி வைக்கின்றன; சில நாட்களில் அந்த இலைகளின் மீது பூஞ்சைக் காளான்கள் வளர்கின்றன. அதனை எறும்புகள் உணவாக்கிக் கொள்கின்றன.


பொதுவாக இறந்த புழு, பூச்சிகள், இனிப்புப் பண்டங்கள், தானியங்களே எறும்புகளின் உணவு.






சாதாரணமாக நம்மைப் பார்த்துதான் எறும்புகள் பயப்பட வேண்டியுள்ளது. ஆனால் சில வகை எறும்புகளைக் கண்டு நாம் மட்டுமின்றி பெரிய விலங்குகளே கூட அலறுகின்றன.

Army Ants என்று அழைக்கப்படும் ராணுவ எறும்புகள் ஆப்பிரிக்காவிலும், Drivers Antsஎன்று அழைக்கப்படும் விரட்டும் எறும்புகள் அமெரிக்காவின் கொலராடோ, கலிபோர்னியா மற்றும் வட கரோலினா




பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. இவை ஊன் உண்ணிகள். ஆயிரக்கணக்கில் இவை படைதிரண்டு வரும்போது அப்பகுதியில் இருக்கும் விலங்குகள், மனிதர்கள் அவ்விடத்தை விட்டே ஓடிவிடுகின்றனர். இவற்றிடம் மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான்! எவ்வளவு பெரிய விலங்கையும் அரித்துத் தின்று விடக்கூடியவை.

பெரிய மலைப் பாம்பையே அரித்துத் தின்றுவிடக் கூடிய எறும்பு அனோம்மா. இந்த எறும்புகளுக்குப் பயந்து போய் மலைப் பாம்புகள் இரையைக் கொன்றபின் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு இவ்வகை எறும்புகள் இல்லை என்று ஊர்ஜிதப்படுத்திவிட்டே விழுங்குகின்றன. இப்படி நம்மை திகிலடைய வைக்கும் எறும்புகளுக்கு கண்கள் குருடு என்றால் ஆச்சரியம்தானே!



மெக்ஸிகோ பகுதியில் வாழும் எகைடான் என்ற எறும்புகள் படையெடுத்துச் சென்று தாக்கக்கூடியவை. இவை இரையைச் சுற்றி வளைத்து வியூகம் அமைத்துத் தாக்குகின்றன. இந்த எறும்புகள் பொதுவாக மக்கள் வாழும் இடங்களுக்குச் சென்று முற்றுகையிடுகின்றன. எனவே இவை வரும் நேரம் அறிந்து மக்கள் அப்பகுதியை விட்டுச் சென்று விடுகின்றனர். இவை வீடுகளில் புகுந்து எலி, பல்லி, கரப்பான், சிலந்தி போன்றவற்றை தின்று விட்டுச் சென்றுவிடுகின்றன. மறந்து போய் ஆடுமாடுகளை விட்டுச் சென்றால் வீடு திரும்பும்போது அவற்றின் எலும்புகளை மட்டுமே நாம் பார்க்க நேரிடும்!

சில வகை எறும்புகள் நம்மை பயமுறுத்தினாலும் பொதுவாக எறும்புகள் கடின உழைப்பிற்கும் ஒற்றுமைக்கும் சேமிப்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.




• Honey Ants என்று அழைக்கப்படும் தேன் எறும்புகள் தங்கள் வயிற்றிலேயே தேன் போன்ற பொருட்களைச் சேகரித்து வைக்கின்றன. இதனால் இவற்றின் வயிறு பருத்து, உருண்டு தேன் குடமாகக் காட்சியளிக்கும். தேன் கிடைக்காத காலங்களில் வாய் வழியே தேனைத் துப்பி மற்ற எறும்புகளுக்குக் கொடுக்கின்றன.

• எறும்பு பூச்சி இனங்களில் ஹைமனாப்டிரா (Hymenoptera) என்ற வகையைச் சேர்ந்தது.

• முற்காலத்தில் பஞ்சம் ஏற்படுகிறபோது காட்டிலிருக்கும் பெரிய எறும்பு புற்றுகளைத் தோண்டி அவை சேமித்து வைத்திருக்கும் தானியங்களை மனிதர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

• வரிசையாக ஊர்ந்து செல்லும்போது ஏதாவது தடை ஏற்பட்டால் முன்னால் செல்லும் எறும்பு பின் வருபவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும். அவை உடனே தங்கள் பயணத்தை நிறுத்தி அபாயம் நீங்கிய பிறகு மீண்டும் பயணத்தைத் தொடர்கின்றன.



ஏரியில் விஷம்!

அரசரை நோக்கி ஆவலுடன் வந்தார் சேனாதிபதி.

"அரசே! இந்தக் கடும் கோடையில் நம் நாட்டு மக்கள் தண்ணீர் பற்றாக்குறையினால் படும் அவதியைக் குறைக்க வழி ஒன்று கண்டுபிடித்து விட்டேன்" என்றார்.

"அப்படியா! என்ன வழி? சீக்கிரம் சொல்லுங்கள்" - குறிஞ்சி வேந்தனின் குரலில் அவசரம் தொனித்தது.

"அரசே! தண்ணீரைத் தேடிக் கொண்டு நானும், நமது வீரர்களும் சென்றபோது ஒரு பெரிய ஏரியைக் கண்டோம். விசாரித்ததில் அதற்கு 'மரகத ஏரி' என்று பெயர் அறிந்து கொண்டேன். நம் குறிஞ்சி நாட்டின் மேற்கு எல்லைக்கும் நம் அண்டை நாடான கதம்ப நாட்டின் கிழக்கு எல்லைக்கும் இடையில் இருக்கிறது."

"நான் கூட, கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதைப் பார்த்ததில்லை. அதில் நீர் இருக்கிறதா?"

"ஏரியில் நீர் நிறைய இருக்கிறது. நம் நாட்டின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்கி விடலாம் என்று நானும் ஆசைப் பட்டேன். ஆனால்... எதிர்பாராது ஒன்று நடந்து விட்டது மன்னா."

"என்ன நடந்தது சொல்லுங்கள்?"

"அரசே! நம் விரோதி நாடான கதம்ப நாட்டிலும் கடும் வறட்சி நிலவுகிறது. இது நாள்வரை மரகத ஏரியின் நீரை பயன் படுத்திக் கொள்ள வேண்டிய நிலை நம் இரண்டு நாட்டிற்குமே ஏற்பட்டதில்லை. ஏரியில் இறங்கி தாகம் தீர நாங்கள் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த போது கதம்ப நாட்டு வீரர்கள் அங்கு வந்து விட்டனர். இந்த ஏரி எங்களுக்குத்தான் சொந்

த. ஜானகி

தும். உங்களுக்கு இதன் மீது உரிமை கிடையாது என்று கூறி நிறைய வீரர்களை காவலுக்கு வைத்து விட்டனர்."

"இதைப் பார்த்துக் கொண்டு நீங்கள் சும்மா இருந்து விட்டீர்களா?" மன்னர் சீற்றத்தோடு வினவினார்.

"நாம் மட்டும் என்ன ஏமாந்தவர்களா? நம் நாட்டு வீரர்களை ஏரியின் மேற்குப் பக்கத்தில் காவலுக்குப் போட்டிருக்கிறேன்."

"புரிகிறது. நம் இருவராலும் நீரைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது."

"ஆம் அரசே! கதம்ப நாட்டு வீரர்களை துரத்தி அடித்தால்தான் நமக்கு நீர் கிடைக்கும். ஆனால் நம்மிடம் இருப்பது போலவே அவர்களிடமும் படை பலம் இருக்கிறது. அந்த நாட்டோடு சண்டையிட்டு ஜெயித்து விட்டால் பிரச்னை இல்லை!"

"நாம் தோற்றுவிட்டால் மரகத ஏரி முழுவதும் அந்தக் கர்வம் பிடித்த கதம்ப நாட்டு மன்னனுக்குச் சொந்தமாகிவிடும். அப்புறம் இந்த ஆண்டு போல வருகின்ற ஆண்டிலும் மழை பொழியவில்லை என்றால் நாம் தண்ணீர் பிரச்னையினால் அவதிப்பட்டுக் கொண்டே இருப்போம்."

"ஆம் அரசே! இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும்."

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த குறிஞ்சி வேந்தன் கூறினார்:

"பூபதி! என் பாட்டன் காலத்திற்கு முன்பிருந்தே இந்தக் கதம்ப நாடு நமக்கு எதிரி நாடாக இருந்து கொண்டிருக்கிறது. எப்பொழுது நமக்கு அவர்கள் தண்ணீர் கொடுக்க மறுக்கின்றனரோ... அந்தத் தண்ணீர் அவர்களுக்கும் பயன்படக் கூடாது. காட்டில் உள்ள ஆசிரமத்தில் கபிலானந்தர் என்ற துறவி இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று அவர் ஆசிரமத்தில் மாறுவேடம் பூண்டு ஐந்து நாழிகை நேரம் தங்கப் போகிறேன். சூரியன் மறையும் சமயத்தில் நம் வீரர்கள் காவல் காத்துக் கொண்டிருக்கும் ஏரிப் பகுதிக்குச் செல்லப் போகிறேன். நீங்கள் அங்கே தயாராக இருங்கள். எரியாத தீவெட்டியை குளத்து நீரில் தூக்கி எறியப் போகிறேன். அந்த தீவெட்டிக்குள் கடும் நஞ்சுப் பொடியை வைத்துக் கட்டியிருப்பேன். தீவெட்டி, ஏரிக்குள் மூழ்கும் போது அதில் உள்ள நஞ்சு ஏரி நீரில் கலந்து விடும். நாம் நம் வீரர்களை அழைத்துக் கொண்டு கிளம்பி விடுவோம். அதைப் பயன்படுத்தப் போகும் கதம்ப நாட்டு மக்கள் ஏன், மன்னன் கூட அழிந்து போகட்டும்."

இதைக் கேட்டுத் திடுக்கிட்ட சேனாதிபதி அப்படியே விக்கித்து நின்றார்.

"**ம**ன்னரே! அதோ பாருங்கள். மரங்கள் அடர்ந்த சோலை கண்களுக்கு விருந்தாகக் காட்சியளிக்கிறது. அதில் தான் கபிலானந்தர் என்ற துறவி வசிப்பதாகக் கேள்விப்பட்டேன். அங்கு போய் நாம் சற்று ஓய்வு எடுத்துக் கொள்வோமா?" என்று கதம்ப நாட்டு மன்னரிடம் சேனாதிபதி தயாளன் கூறினார்.

"ஆம் தயாளா! இந்த வெயில் நேரத்தில் நீங்கள் காட்டிய பகுதி கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது. தாங்கள் அங்கு முன்னால் சென்று விடுங்கள். நான் இன்





னும் சற்று நேரம் கழித்து மாறு வேடத்தில் அந்த ஆசிரமத்திற்கு வருகிறேன். மாலை வரை அங்கு தங்கி ஓய்வு எடுக்கலாம்! விளக்கு வைக்கும் நேரத்தில்தான் நமக்கு வேலையே இருக்கிறது" என்றார் கதம்ப நாட்டு மன்னர்.

"வேலையா? என்ன சொல்கிறீர்கள்? ஒன்றும் புரியவில்லை... மன்னா!"

"புரியும்படி சொல்கிறேன். தயாளா! தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். என் தாத்தா காலத்திற்கு முன்பிருந்தே குறிஞ்சிநாடு நமக்கு எதிரி நாடாக இருந்து கொண்டு வருகிறது. அந்த மண்டைகனம் பிடித்த குறிஞ்சி வேந்தன் மரகத ஏரியின் நீரை நாம் பயன்படுத்தக் கூடாது என்று தன் வீரர்களை காவலுக்குப் போட்டிருக்கிறான். தற்சமயம் நம்மால் உபயோகப்படுத்திக் கொள்ள முடியாத நீரை அவர்களும் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது. இதோ இந்தப் பையில் கொடிய விஷம் வைத்திருக்கிறேன். இருள் கவிந்ததும் இந்தப் பையை ஏரி நீருக்குள் தூக்கி எறியப் போகிறேன். அப்பொழுதுதான் எதிரிகளுக்கு நம் மீது எந்தவித சந்தேகமும் உண்டாகாது.



"விஷம் நீரில் மெதுவாகக் கலந்துவிடும். நம் வீரர்களுடன் நாம் வெளியேறி விட்டால்... அவ்வளவுதான் குறிஞ்சி நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் நீரைப் பயன்படுத்த ஆரம்பிப்பார்கள். அப்புறம்... மக்களோடு மன்னனும் பரலோகம் சென்று விடுவான். இப்பொழுது தங்களுக்குப் புரிந்ததா?"

பதில் கூடச் சொல்ல முடியாது அதிர்ச்சியில் உறைந்தபடி நின்று கொண்டிருந்தார் சேனாதிபதி தயாளன்.

"துறவியாரே! வணக்கம். நான் ஒரு வழிப்போக்கன். இந்த வெயிலில் தங்கள் ஆசிரமத்தில் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு மாலைக்குள் கிளம்பி விடுகிறேன்" என்று கூறியபடி மாறு வேடத்தில் வந்திருந்த குறிஞ்சி வேந்தனை கபிலானந்தர் இன்முகத்துடன்

வரவேற்றார். பழங்களும் குளிர்ந்த நீரும் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தார்.

அதே சமயம் மாறு வேடத்தில் அங்கு வந்த கதம்ப நாட்டு மன்னரையும் வரவேற்றார்.

இரண்டு மன்னர்களுக்கும் ஒருவரை ஒருவர் அடையாளம் தெரியவில்லை. எப்பொழுது கதிரவன் மேற்குத் திசைக்கு விரைவான் என்று இருவர் உள்ளங்களுமே எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

ஆசிரமத்தின் திண்ணைக்கு வெளியே இடது பக்கம் இருந்த வேப்ப மரத்தடியில் உட்கார்ந்து கொண்டார் குறிஞ்சி வேந்தன். வலது பக்கம் இருந்த பூவரச மரத்தடியில் அமர்ந்து கொண்டார் கதம்ப மன்னர்.

தன் ஆசிரமத்திற்கு வந்திருப்பவர்கள் யார் என்பது கபிலானந்தருக்குப் புரிந்து விட்டது. இரு மன்னர்களும் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கையை எண்ணி அவர் கருணை உள்ளம் கலங்கியது. என்ன செய்வது? இவர்களை எப்படி திருத்துவது?

யோசனையில் ஆழ்ந்தார் துறவி.

அப்போது ஆசிரமத்திற்குள் புலிக் குட்டி, நாய், மான் மூன்றும் நுழைந்தன. ஆசிரமத்தின் இடது பக்க வேலிக்குச் சற்றுத் தள்ளி ஒரு பாத்தியில் நீர் இருந்தது. மூன்று விலங்குகளும் மரத்தடியில் அமர்ந்திருந்த மன்னர்கள் இருவரையும் முறைத்து முறைத்துப் பார்த்தன. சில நொடிகளில் நாய் பயங்கரமாகக் குரைத்தது. புலி உறுமியது. மான்குட்டி ஒலி எழுப்பியது. உடனே துறவி சங்கேத மொழியில் ஏதோ கூற மூன்றும் பாத்தியில் உள்ள நீரை குடிக்க ஆரம்பித்தன. குடித்து முடித்ததும் மீண்டும் மன்னர்கள் இருவரையும் பார்த்த படி துறவிக்கு அருகில் வந்தன. அன்புடன் துறவி அவைகளைத் தடவிக் கொடுக்க மூன்றும் ஆசிரமத்தை விட்டு வெளியேறின.

சிறிது நேரம் அங்கு ஒரே அமைதி. துறவி ஆடாது, அசையாது இரண்டு மன்னர்களையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தார்.

சிலை போன்று துறவி அமர்ந்திருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த குறிஞ்சி வேந்தனால் அதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை. "துறவியாரே! தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் இப்படி இடிந்து போய் எங்களையே பார்த்தபடி அமர்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

திடுக்கிட்டவராய், "இங்கிருந்து சென்ற மூன்று விலங்குகளும் சொன்ன செய்திதான் என்னை இந்த நிலைக்குத் தள்ளி விட்டது" என்றார் துறவி.

"எ...ன்...ன? தங்களுக்கு மிருகங்கள் பேசும் பாஷை தெரியுமா?"

ஆவலை அடக்க முடியாமல் வினவினார் கதம்ப மன்னர்.

"தெரியும்."

"அப்படியானால் அவை பேசிக் கொண்டதைக் கூறுங்கள்."


துறவி கபிலானந்தர் கூறலானார்:

"ஆசிரமத்திற்குள் நுழைந்த மிருகங்களில் நாய்தான் முதலில் என்னிடம், 'இதோ இங்கு இரண்டு கொலைகாரர்கள் அமர்ந்திருக்கிறார்கள்' என்றது. உடனே புலிக் குட்டி, 'தங்களிடம் கொடிய நஞ்சை வைத்திருக்கும் இவர்கள் இருவரையும் துரத்தி விடுங்கள்' என்றது. அதைத் தொடர்ந்து, 'மரகத ஏரியில் கொடிய விஷத்தைக் கலக்க வந்திருக்கும் இவர்களை உடனே வெளியேற்றுங்கள்' என்று

"ஒத்து ஊதுபவரை ஏன் நிறுத்திட்டீங்க?"


"எனக்கு 'ஒத்து' வரலை அதனால் தான்...!"

— ஜி. குமரேசன், பாண்டமங்கலம்.



குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 வ	ள்	ளு	வ	ர்		2 வி	த்	தை
ங்				ப		ர		ந்
3 கா	க	ம்		ம்		ல்	ண	4 ச
ள				5 க				
ம்	த	ந்	6 த		7 ப	ஞ்	ச	ம்
				8 மோ				ள
ல்	ய	9 வ		தி		லி	ல்	10 ப
யி		ள்		ர				ம்
11 வெ	ள்	ளி		ம்	ப	ம்	த	12 க



மான் கூறியது. மூன்று மிருகங்களும் மாறி மாறி கூறவே நான் அப்படியே தடுமாறிப் போனேன். 'இவர்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறோம்' என்று அவை கூறின.


"இவர்கள் வழிப் போக்கர்கள் இல்லையா? இவர்களிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள்? நீரை அருந்திவிட்டுக் கூறுங்கள்" என்றேன்.

"நீரைக் குடித்து முடித்ததும் என்ன கேட்டன தெரியுமா? 'நாங்கள் மூவரும் எங்களுக்குள் இருக்கும் பகைமை உணர்ச்சியை விட்டு ஒற்றுமையாக அன்போடு வாழ்கிறோம். நீரைப் பகிர்ந்து குடிக்கிறோம். ஐந்தறிவு படைத்த நாங்களே இணைந்து வாழும்போது ஆறறிவு படைத்த மன்னர்களாகிய இவர்கள் இருவரும் ஏன் ஒற்றுமையாக வாழக் கூடாது? எங்களைப் பார்த்தாவது திருந்தி வாழட்டும்' என்று கூறியபடி என் அருகில் வர நானும் தங்களிடம் சொல்வதாகக் கூறவே அவை சென்று விட்டன" என்றார் துறவி.

இதைக் கேட்ட மன்னர்கள் இருவரும் திடுக்கிட்டனர். விலங்குகள் கேட்ட கேள்வி மண்டையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது. கேவலம் விலங்குகள் புத்தி சொல்லும் அளவுக்கு தாழ்ந்து விட்டோமே என்று தங்களுக்குள் எண்ணி வேதனைப் பட்டனர்.


"துறவியாரே! எங்களை மன்னித்து விடுங்கள். எங்கள் அகக் கண்களைத் திறந்து விட்டீர்கள். பகைமை என்ற முள் செடியை எங்கள் உள்ளத்திலிருந்து களைந்து விட்டு அன்பு என்னும் அற்புத விதையை ஊன்றி விட்டீர்கள். இனி நாங்கள் ஒற்றுமையோடு இருப்போம்" என்று கூறியபடி இருவரும் துறவியை வணங்கினர். துறவி இரு மன்னர்களின் கரங்களையும் ஒன்றாக இணைத்தார்.

"மன்னர் பெருமான்களே! என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் சேனாதிபதிகள் நீங்கள் விஷம் கலக்கப் போகும் விஷயத்தை வருத்தத்துடன் தெரிவித்தனர். நான் எப்படி தடுப்பது என்று யோசிக்கும் போது நான் வளர்க்கும் பிராணிகள் வந்தன. அவை உங்களைப் பார்த்து மிரண்டன. இதைப் பயன்படுத்தி தங்களிடம் நாடகமாடி விட்டேன்" என்றார் துறவி.



எங்கள் பள்ளியில் நடந்தது!

என்ன காலம்?



தமிழ் ஆசிரியர் இலக்கணத்தில் கடந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் என காலங்களைப் பற்றி நடத்திக் கொண் டிருந்தார். அப்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை எழுப்பி "அவன் குடை வாங்கினான். இது என்ன காலம்?" என்று கேட்டார். சிறிது யோசித் தவன் "இது மழைக்காலம்" என்றானே பார்க்கலாம்! வகுப்பே சிரித்தது. சிரிப் பதைப் பார்த்த அவன் தான் தவறாக சொல்லி விட்டோம் என்பதை அறிந்து திருதிருவென விழித்தான்.

–சின்னத்தம்பி,
வெள்ளையாம்பட்டு.

யார்?

எங்கள் ஆசிரியர் வாரம் ஒருமுறை பொது அறிவிற்கென அரைமணி நேரம் ஒதுக்குவார். ஒருநாள் அந்த நேரத்தில்




"ஜார்ஜ் வாஷிங்டன் யார்?" என்று ஒரு மாணவியிடம் கேட்டார் ஆசிரியர். அவள் எழுந்து "வாஷிங் மெஷினைக் கண்டுபிடித் தவர் டீச்சர்" என்றதும் ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம். பிறகு ஆசிரியர் அந்த மாணவியிடம் "பெயரில் 'வாஷிங்' இருப்பதாலேயே அவர் வாஷிங் மெஷினைக் கண்டுபிடித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை" என்றார்.

– கி. உமா மகேஸ்வரி,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

தேனிரும்பு...

அறிவியல் பாடவேளை. மாதத் தேர்வு விடைத்தாள்களைத் திருத்திக்



தேனிரும்பு என்றால் என்ன?

கொடுத்தார் ஆசிரியர். ஒரு மாணவனின் விடைத்தாளை எடுத்துப் படிக்க ஆரம் பித்தார். "தேனிரும்பு என்பது என்ன? என்ற கேள்விக்கு மூன்று பங்கு தேனும் ஒரு பங்கு இரும்பும் சேர்ந்த கலவைக்கு தேனிரும்பு என்று பெயர்" என ஆசிரியர் வாசித்து முடிக்கவும் அந்த மாணவனைத் தவிர அனைவரும் சிரிக்க ஆரம்பித்தோம். ஆசிரியரும் சிரித்துவிட்டு "தேன் என்ற வார்த்தையைப் பார்த்ததும் கொஞ்சமும் யோசிக்காமல் இப்படிதான் எழுதுவதா?" என்று கேட்க அவன் மௌனமாக நின்றான்.

ம. பிரபு,
பெரியதச்சூர், திண்டிவனம் வட்டம்

எங்கு உள்ளது?

நன்னெறி பாடவேளை. ஆசிரியர் கண்ணகியைப் பற்றி கூறிக் கொண்டிருந் தார். "கண்ணகி சிலையை யாராவது பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். சிலர் பார்த்திருப்பதற்கு அடையாளமாக கையைத் தூக்கினர். கை தூக்கியவர்களில் ஒருவனை எழுப்பி "கண்ணகி சிலை எங் குள்ளது?" என்று ஆசிரியர் கேட்டார். சிறிது யோசித்து விட்டு "கண்ணகி சிலை இருக்க வேண்டிய இடத்துல பத்திரமா இருக்கு சார்" என்றானே பார்க்கலாம்! ஆசிரியர் சிரித்துவிட்டு "பிறகு ஏன் கை தூக்கினே?" என்றார். "பார்த்திருக்கேன் சார். ஆனால் இடம் மறந்துப் போச்சு" என்று கூறினான் அந்த மாணவன்.

– ஆர்.வி. மயில்வாகனன்,
டான்பாஸ்கோ பள்ளி, மதுரை –4.



சத்தம்

மறுவாரம் பரீட்சை நடக்க இருந்த தால் எல்லா ஆசிரியர்களும் எங்களைப் படிக்கும்படி விட்டு விட்டனர். படிக்கும் சத்தம் அதிகமாகக் கேட்டது. தமிழாசிரி யர் வகுப்பிற்குள் நுழைந்து "எல்லோரும் கத்தினால் பக்கத்து வகுப்புகளில் உள்ள வர்களுக்குக் கஷ்டம். வாய் விட்டுப் படிக்



காமல் வாய்க்குள்ளேயே படிக்கலாமே!" என்றார். குறும்புக்கார மாணவன் ஒருவன் மெதுவாக "மனதுக்குள் வேணா படிக் கலாம். வாய்க்குள்ளே எப்படி படிக்க முடி யும்?" என்றான். அது தமிழாசிரியர் காதில் விழ, "இப்படி பேசுவதில் மட்டும் குறைச் சல் இல்லை. நீ மனதுக்குள் படிச்சாலும் சரி, வாய் விட்டுப் படிச்சாலும் சரி மதிப் பெண் வாங்கினால் போதும்" என்றார்.

அ. அர்ச்சுனன் துத்திப்பட்டு.

முடி...

பள்ளியில் உணவு இடைவேளை. நான் என் தோழிகளுடன் அமர்ந்து பேசிய படி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். திடீ ரென என் தோழி என்னிடம் "முடி, முடி" என்று கத்தினாள். நானோ "எதை முடிக்க வேண்டும்? சாப்பாட்டையா, பேச்சையா?" என்று கேட்டேன். "ஐயோ! உன் சாப்பாட் டில் முடி இருக்கு. எடுத்துப் போடு" என்று சொன்னாள். பிறகே எனக்குப் புரிந்தது. அவளுக்கு நன்றி கூறினேன்.

– க. பிரியா, ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மகளிர்
மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

காட்சி – 1

இடம்: செல்வி வீடு.

செல்வி: அசோக்! அசோக்!

அசோக்: என்ன செல்வி அப்படி ஓடிவரே?

செல்வி: உங்கிட்டே இப்போ ஓர் அதிசயம் காட்டப் போறேன்!

அசோக்: அதிசயமா என்ன அது?

செல்வி: ஆமாம்! அதிசயமேதான்! முதல்லே இது என்ன சொல்லு பார்க்கலாம்!

அசோக்: இது தெரியாதா? இது ஒரு சாதாரண சணல் கயிறு. கோணி மூட்டை வாயை அழுத்தமா, கெட்டியா தைக்க இதை உபயோகப்படுத்துவாங்க!

செல்வி: ஆனா நான் கையிலே பிடிச்சிருக்கிற இது சாதாரணக் கயிறு இல்லே, மந்திரக் கயிறு.

அசோக்: என்னது மந்திரக் கயிறா?

செல்வி: ஆமாம்! முதலில் ஒரு மெழுகு வர்த்தியைக் கொண்டுவா!



மந்திரமா, தந்திரமா?

அசோக்: எதுக்கு மெழுகுவர்த்தி?

செல்வி: விளக்கமா அப்புறம் சொல்றேன்! முதல்லே கொண்டுவா!

அசோக்: சரி, இதோ கொண்டு வரேன்! (உள்ளே சென்று மெழுகுவர்த்தியைக் கொண்டு வருகிறான்) இதோ மெழுகுவர்த்தி.

செல்வி: தீக்குச்சியைக் கொளுத்தி அதை எரியவிடு பார்க்கலாம்.

அசோக்: ம்! இதோ எரியவிட்டாச்சு!

செல்வி: இப்போ இந்தக் கயிற்றுலே கொஞ்சம் வெட்டித்தரேன். இந்தா, இதை தீ ஜுவாலைக்கு நேரா மேல காண்பி.

அசோக்: இதோ காண்பிக்கிறேன்! ஐய்யய்யோ, கயிறு மளமளன்னு எரிஞ்சு கருகிட்டுதே! இதுதான் அதிசயமா?

செல்வி: பொறு அசோக். இப்போ இந்த மீதிக் கயிறை இந்தத் தடித்த இரும்புத் துண்டுலே அழுத்தமா இடைவெளியில்லாம சுத்தி முடிச்சுப்போட்டுத் தரேன். ம். இந்தா. இப்போ சணல் கயிறு சுத்தியிருக்கற இந்தப் பகுதியை இந்த நெருப்பு ஜுவாலைக்கு மேல நேரா காண்பி பார்க்கலாம்.

அசோக்: ஐய்யய்யோ... அப்படிக் காண்பிச்சா கயிறு எரிஞ்சுடுமே... இதுலே என்ன அதிசயம்?

செல்வி: பொறு அசோக். 'தீயே கயிறை எரிக்காதே'ன்னு சொல்லிக்கிட்டே



காண்பி!

அசோக்: அப்படி சொன்னா, கயிறு எரியாதா?

செல்வி: சொல்லிட்டுச் செய்! அப்புறம் பாரு.

அசோக்: சரி! 'தீயே கயிறை எரிக்காதே! தீயே கயிறை எரிக்காதே!' அக்கா, என்ன இது? அதிசயமா இருக்கு! தீ கயிற்றை எரிக்கவேயில்லை.

செல்வி: இன்னும் கொஞ்ச நேரம் இரும்புத் துண்டை அப்படியே பிடிச்சுக்கிட்டிரு! என்ன நடக்கறது பார்க்கலாம்.

அசோக்: ஆ... ஐயோ!

செல்வி: என்ன ஆச்சு?

அசோக்: இரும்புத் துண்டு சூடு ஏறி, என் உள்ளங்கையிலே பரவுது! இது எப்படி? கயிறே நெருப்பு பட்டு எரியாம இருக்கும்போது, உள்ளே இருந்த இரும்புத் துண்டிலே மட்டும் சூடு ஏறியிருக்கு. அதிசயமாத்தான் இருக்கு.

செல்வி: இது ஒரு விஞ்ஞான தந்திரம்! நீ கயிற்றுப் பகுதியை ஜுவாலைக்கு எதிரிலே காண்பிச்சாலும் கயிற்றிலே உண்டான சூட்டை, உள்ளே இருக்கிற தடித்த இரும்பே உடனடியா இழுத்துக்கிட்டு சூடாயிடுது. அதனாலதான் கயிற்றுக்கு ஒண்ணும் ஆகலே!

அசோக்: அதிசயம்தான்.

எஸ். ஆர். ஜி. சுந்தரம்

காட்சி – 2

இடம்: செல்வி வீடு. (அசோக் விளையாடிவிட்டு வருகிறான்.)

அசோக்: அக்கா, ஏதோ பானக வாசனை மாதிரி வருது இல்லே?

செல்வி: கண்டுபிடிச்சுட்டியே! அம்மா பாட்டி வீட்டுக்குப் போயிருக்காங்க! நமக்காகக் கோடை வெயிலுக்கு இதமா, பானகம் கரைச்சு வச்சுட்டுப் போயிருக்காங்க.

அசோக்: அப்படியா? எதுலே கரைச்சு வச்சுட்டுப் போயிருக்காங்க!

செல்வி: அதோ அந்தச் சின்ன கலர் ஜாடியிலேதான் கரைச்சு நிரப்பியிருக்காங்க!

அசோக்: சபாஷ்! அப்போ நானே முதல்லே ருசி பார்க்கறேன். (ஜாடியில் பொருத்தப்பட்டிருந்த குழாயைத் திறக்க) ஐய்யய்யோ என்ன அக்கா இது?

குழாயைத் திறந்தாச்சு ஆனா பானகம் வரலே! ஜாடி உள்ளே பானகம் இருக்கா இல்லே நீ பொய் சொல்றியா?

செல்வி: இல்லே உண்மையைத்தான் சொல்றேன்! ஜாடி குழாயை நல்லா திற! நிறைய பானகம் இருக்கு.

அசோக்: நல்லாத்தான் திறந்திருக்கேன். தட்டிக்கூட பார்த்தேன்! பானகம் வரலே.

செல்வி: ம்! இப்பத்தான் புரியறது. இது ஒரு மாய ஜாடி!

அசோக்: மாய ஜாடியா?

செல்வி: ஆமாம்! பானகத்தை முதலில் எனக்குத் தருவதாக நினைத்தபடி கண்ணை மூடிக் கொண்டு இந்த மந்திரத்தைச் சொல்! பிறகு பார்!

அசோக்: என்ன மந்திரம்?

செல்வி: 'சரிகமபதநிச... சரியாய் வாய் திற!'– ம்! கண்ணை மூடிக்கிட்டு சொல் பார்க்கலாம்!

அசோக்: சரிகமபதநிச... சரியாய் வாய்திற!

செல்வி: இப்போ கண்ணைத் திற!

அசோக்: அட! பானகம் குழாய் வழியே டம்ளரில் வந்து விழுறதே! பானகத்தை முதலில் உனக்குத் தருவதாக நினைத்துக் கொண்டதன் சக்தியா இது?

செல்வி: அப்படி இல்லை, சும்மா விளையாட்டுக்கு அப்படி செய்யச் சொன்னேன். இதுவும் ஒரு விஞ்ஞான வேடிக்கைதான்.

அசோக்: எப்படி?

செல்வி: நான் இப்போ என்ன செய் திருக்கேன் பார்!

அசோக்: ஜாடியின் மேல் மூடியை திறந்து கையிலே வச்சிருக்கே!

செல்வி: நான் இப்படி செய்ததாலதான் பானகத்தின் மேல் பரப்பில் காற்றின் அழுத்தம் ஏற்பட்டு இப்போ பானகம் குழாய் வழியே வருது... முதலில் ஜாடி விளிம்புவரை பானகம் வழிய வழிய நிரப்பப்பட்டு ஜாடியின் மூடியும் அழுத்தமாக மூடப்பட்டிருந்தது. அதனால் காற்றின் அழுத்தத்திற்கு சற்றும் இடமில்லாமல் குழாயைத் திறந்தும் பானகம் வெளியே வரவில்லை. குழாயும் ரொம்ப சிறிய துவாரமுடைய குழாய்!

அசோக்: அப்படியானால் இந்த மாதிரி ஜாடியிலே விளிம்புவரை எந்த திரவத்தையும் நிரப்பக் கூடாது இல்லையா?

செல்வி: ஆமாம்!

அசோக்: சரிகமபதநிச மந்திரம் இப்போ எனக்கும் தெரிஞ்சு போச்சு... இரு. கையிலே இருக்கற பானகத்தை முதல்லே குடிக்கறேன்.

செயற்கைச் சாயம்



பெர்கின் என்ற மாணவன் மலேரியாவுக்குக் கை கண்ட மருந்தான கொய்னாவைச் செயற்கை முறையில் தயாரிக்க முடியுமா என்ற சோதனையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். ஒரு நாள் அனலில் இட்டு அவன் சோதித்துக் கொண்டிருந்த பொருள் அதிகமாக எரிந்து கருகி விட்டது. ஆத்திரமடைந்த அவன் அதைத் தூக்கி எறிந்தான். அது அருகில் இருந்த நீர்த் தொட்டிக்குள் போய் விழுந்தது. உடனே தொட்டி நீர் முழுவதும் கரு நீலமாக மாறிவிட்டது. இதைக் கண்டு வியந்த அம் மாணவன், அதை எடுத்துச் சோதித்துப் பார்த்தான். விளைவு செயற்கைச் சாயம் தோன்றியது.

– ஆர். ஆர். பூபதி



பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் – அது என்ன?

1. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். – அது என்ன?

2. பிணம் வேகும்; துணி வேகாது. – அது என்ன?

3. பரட்டைத் தலை மாமியாருக்கு பவளம் போல் மருமகள். – அது என்ன?

4. வெள்ளைக்காரனுக்கு மஞ்சள் சட்டை. – அது என்ன?

5. அஞ்சு வீட்டிற்கு ஒரு முற்றம். – அது என்ன?

6. கூட்டினால் 11; பெருக்கினால் 30. – நான் யார்?

– சு. வீரா, பிராமணவயல்.

1. தலையோடு உறவு கொண்டாடும் தம்பிரானுக்கு உடம்பெல்லாம் பல். – அது என்ன?

2. ஒற்றைக் கண்ணன்; ஒல்லியானவன், பிரிந்தவர்களைச் சேர்த்து வைப்பான். – அவன் யார்?

3. சொன்னதைச் செய்வான். – அடிமையுமல்ல. பல மொழி தெரிந்தவன். – அறிஞனுமல்ல. – அவன் யார்?

4. நாலு கால் இருந்தும் நடக்க முடியாமல் படுத்துக் கிடக்கிறான். – அவன் யார்?

5. அம்மாவும் பிள்ளையும் சேர்ந்தால் அகப்பட்டதெல்லாம் தூள் தூள். – அவர்கள் யார்?

– சு. சௌமியா, ஐந்தாம் வகுப்பு, ஜான்சன் ஆங்கிலப் பள்ளி, தூத்துக்குடி.

1. அதிகாலை விருந்தாளி! காம்பவுண்டு சுவர் தாண்டி வருவான். – அவன் யார்?

2. காற்றைக் குடிக்கும் குண்டுப் பையன்! ஊசி குத்தினால் ஒல்லிப் பையன்! – அவன் யார்?

3. நான்கு கால்களுண்டு விலங்கல்ல! இரண்டு கைகளுண்டு மனிதனுமல்ல! – அது என்ன?

4. சின்னக் குளத்திலே வெள்ளைப் பாம்பு! கரையில் கக்கியது மஞ்சள் ரத்தினம்!. – அது என்ன?

– எஸ். கவிதா, திருநெல்வேலி.

1. கால் இல்லாமல் ஓடுகிறான். – யார் அவன்?

2. வெள்ளைச் சிறையில் மஞ்சள் அழகி அடைந்து கிடக்கிறாள்! – யார் அவள்?

3. வாசலில் தவறவிட்ட வெள்ளை முறுக்கு, எடுத்து திங்கத்தான் ஆளில்லை! – அது என்ன?

4. பச்சை சொம்பிலே தண்ணீர் குடித்தால் தித்திப்பாயிருக்கும்! – அது என்ன?

5. சாப்பிட முடியாத மீன் இது? – அது என்ன மீன்?

– ஆ. அருண்ராஜ், சேலம்.

விடை :

1. கிளிமூக்கு. 2. இட்லி. 3. சோளம். 4. நெல். 5. உள்ளங்கை. 6. ஆரஞ்சு.

1. சீப்பு. 2. ஊசி. 3. கணிப்பொறி. 4. கட்டில். 5. அம்மிகுழவி.

1. நாளிதழ். 2. பலூன். 3. நாற்காலி. 4. விளக்கு, திரி, சுடர்.

1. கடிகார முள். 2. முட்டை. 3. கோலம். 4. இளநீர். 5. விண்மீன்.


வித்தை மறுத்த தீபகன்!

கோதாவரி ஆற்றின் கரையில் ஒரு குருகுலம். அதன் ஆசிரியராக இருந்தவர் ஆங்கிரஸ முனிவரின் சீடர் வேத தர்மர். அவருக்கு அஷ்டமா சித்திகளும் தெரியும். அதைக் கற்க அவரது சிஷ்யர்கள் ஆவலாக இருந்தனர். தகுதியுள்ளவர்களுக்கே அதைக் கற்பிக்க முடியும். தவறான, தீய ஆசைகளுக்கு சிஷ்யர்கள் அதைப் பயன்படுத்தினால் குருவைப் பாபம் சூழும்.

திடீரென்று வேத தர்மரின் உடலில் சில புண்கள், கொப்பளங்கள் தோன்றின. பச்சிலை வைத்துக் கட்டியும் ஆறுவதாக இல்லை! கொப்புளங்களிலிருந்து சீழும் ரத்தமும் வரத் தொடங்கியது. பல மாணவர்களும் கற்றவரை போதும் என்று மூட்டை கட்டத் தொடங்கினர். குரு மனதுக்குள் சிரித்துக் கொண்டார். மிஞ்சியவன் தீபகன் ஒருவன்தான்.

இந்தச் சமயத்தில் பார்வையும் மங்கி வருவதாக வேத தர்மர் கூறினார். அவருக்குக் கை ரேகை, ஜோதிடம் எல்லாம் தெரியும்.

''தீபகா!




ஆர். பொன்னம்மாள்

சென்ற பிறவியில் செய்த பாவத்தால் எனக்கு இப்படி ஆகி விட்டது. கங்கையில் நீராடி காசி விஸ்வநாதரை வழிபட்டால் தான் இந்தப் பாவம் தொலையும்" என்றார் குருநாதர்.

உடனே குரு நாதரை அழைத்துக் கொண்டு காசிக்குப் புறப்பட்டான் தீபகன். காட்டெருமை ஒன்று துரத்த ஒரு பள்ளத்தில் விழுந்தார் வேத தர்மர். அவரைச் சுமந்து கொண்டு சென்றான் தீபகன்.

"தீபகா! எல்லா சிஷ்யர்களும் வாசமலரில் தேன் குடிக்கும் வண்டு போல், என்னிடமிருந்து கற்க வேண்டியவைகளைக் கற்றபின் பறந்து விட்டார்கள். நீ மட்டும் ஏன் சிரமப்படுகிறாய்? என் ரணங்கள் உனக்கும் அருவருப்பைத்தானே தரும். இங்கேயே என்னை விட்டு விட்டு நீ உன் பெற்றோரிடம் போய்ச் சேர்" என்றார் வேத தர்மர்.

"குரு தேவா! மரணமும், வியாதியும் சொல்லிக் கொண்டு வருவதில்லை! எனக்கும் இவை வராது என்பது என்ன நிச்சயம்? அரச குமாரர்களாகப் பிறந்தும் பிரகலாதனும், துருவனும் இளம் வயதில் கஷ்டப்படவில்லையா? மற்றவருக்குச் செய்யும் உபகாரங்களால் இறைவன் ஆனந்தப்படுகிறான் என்று போதித்த தாங்களே இப்படி பேசலாமா? துன்பங்கள் கடவுள்



வைக்கும் பரீட்சை என்று சொல்லிக் கொடுத்ததே தாங்கள்தானே! தாங்கள் ஜோதிடத்தில் வல்லவர். தங்கள் சொற்படி நிச்சயம் குணமாகும். எனக்கு ஒரு சிரமமு மில்லை! என் பெற்றோருக்கு இந்த நிலை என்றால் விட்டு விட்டுச் செல்வேனா? குரு தந்தைக்குச் சமமல்லவா?'' என்றான் தீபகன்.

குருவுக்குக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. ஒருவாறு காசிக்கு வந்து விட்டார்கள். கங்கை நீரில் காயங் களைக் கழுவி மருந்திடுவான் தீபகன். குருவின் ஆடைகளைத் துவைத்துக் காய வைப்பான். உலர்ந்த வஸ்திரம் உடுத்தி விபூதி, சந்தனம் இட்டு பூஜை செய்ய உதவு வான். பிட்சை எடுத்து சமைத்து உணவிடு வான்.

"நாலு தெரு அலைந்து பிட்சை எடுத் தாலும் கொஞ்சம்தான் கிடைக்கும். எனக்காக நீ கூச்சத்தை விட வேண் டாம்ப்பா! பசி பிராணன் போகிறது. இது அரை வயிற்றுக்குக் கூடப் போதாது. அதற் காக உன் உணவைத் தியாகம் பண்ணுகிற வேலையெல்லாம் வேண்டாம். ஏன் இன் னும் பாவச் சுமையை என் மீது ஏற்று கிறாய்! நாளைக்கு மணி கர்ணிகையில் இழுத்து விடு. முதலைக்கு ஆகாரமாய் போகும் இந்த உடல். புண்ணியமாவது கிடைக்கும்" என்று கோபமாகவும் சலிப் பாகவும் பேசுவார் ஒரு நாள்.

''அடேயப்பா! எவ்வளவு பிட்சை வாங்கி வந்திருக்கிறாய்! துறவி மறு நாளைக்கென்று வைத்துக் கொள்ளக் கூடாது! அது உன் மனதில் பதியவில் லையா? ஹூம்! நீ என்ன செய்வாய்? வளரும் பிள்ளை! பசி அதிகமாய் இருக் கும். கொஞ்சம் அரிசியை லாலா கடை யில் கொடுத்து இனிப்பு வாங்கிச் சாப்பிட எண்ணினாயா? ஹூம்! இந்த நிலையிலே இவனுக்கு இத்தனை திமிரா என்று யோசிக்கிறாய்! அப்படித்தானே! அதில் தப்பே இல்லை! உன் நிலையில் நான் இருந் தாலும் அப்படித்தான் நினைப்பேன். புண்ணியத்துக்குப் பழைய ஆடை கொடுத் தால் வீட்டு முன்னாலேயே முழம் போட் டுப் பார்த்தவன் போக்கில் நான் பேசு கிறேன்'' என்பார் மறுநாள்.

தீபகன் பதில் சொன்னால் கோபம் அதிகமாகி கையிலுள்ளதை வீசி எறிவார். மண் பாண்டங்களானால் உடையும். சில அவனைக் காயப்படுத்தவும் செய்தன.


"ருசியே இல்லை" என்று ஒரு நாள் ஆத்திரப்பட்டால், "இப்படி ருசி ருசியாகத் தின்று இந்தப் புண் உடலை போஷிக்க வேண்டுமா?" என்று மண்ணில் கொட்டு வார் மறுநாள். ஆனால் தீபகனின் அன்பும் பொறுமையும் நூலளவு கூடக் குறையவே இல்லை!

"தீபகா! நான் உன்னிடம் இதமாகவே நடந்து கொள்வதில்லை" என்று குருநாதர் வருந்தும் போது, "ஸ்வாமி! அது தங்கள் உள்ளத்திலிருந்து வந்ததாய் நான் கருத வில்லை! வியாதியின் கொடுமையாலும், பிறருக்குத் தொல்லை தருகிறோமே என்ற சலிப்பினாலும் அப்படி பேசுகிறீர்கள்" என்று இதமாகக் கூறி, அதற்குப் புராண, இதிகாசங்களிலிருந்து உதாரணங்கள் கூறு வான்.

ஒரு நாள் கம்பனேஸ்வரர் சன்னதியி லிருந்து தன்னை யார் பின் தொடர்கிறார் கள் என்று திரும்பிப் பார்த்தான் தீபகன். வந்தவர் சிவ பெருமான் என்று கண்டு திகைத்தான். ஆனால் நிற்காமல் நடந்தான். குரு பசியோடிருப்பாரே!

"அப்பனே! நில்... இப்படி அலைய விடு கிறாயே! உன் குருபக்திக்கு மெச்சி வரம் தர வந்திருக்கிறேன்!" என்றார் ஈசன்.

"அப்படியா! எது வாங்குவதானாலும் என் குருநாதர் அனுமதி வேண்டும். இங் கேயே அலையாமல் இருங்கள். குரு தேவ ரிடம் கேட்டுக் கொண்டு வருகிறேன்'' என்றபடி வேத தர்மர் இருக்குமிடத்திற்கு விரைந்து வந்தான் தீபகன்.




''கால் மேலே கால் போட்டால் என்ன ஆகும்?''

''தெரியலியே!''

''டெலிஃபோன் பில் ஏறும்!''

- எஸ். லஷ்மி

உலகப் பள்ளி



கற்றுக் கொள் நீ, கற்று கொள்,
உற்றுப் பார்த்துக் கற்றுக் கொள்!

உலகைப் பார்த்துக் கற்றுக் கொள்,
உகந்தவற்றை ஏற்றுக் கொள்!

உதயக் கதிரைப் பார்த்தே நீயும்
ஓயாதுழைக்கக் கற்றுக் கொள்!

பாலும், நீரும் பார்த்தே நீதான்
பெரிதும் நட்பைப் பேணிக் கொள்!

ஆல் போல் மரங்கள் ஆயிரம் பார்த்தே
அடுத்தவர்க் குதவிட ஆசை கொள்!

நீரைப் பிரியா மீனைப் போற்றி,
நாட்டுப் பற்றை ஏற்றுக் கொள்!

சேமிப் பென்னும் சீரிய் பண்பை
சிற்றெறும்பிடம் சென்று கற்றுக் கொள்!

நாமெப் போதும் நல்லவற்றை
நாளும் கற்றிட வேண்டாமா?

— ஆர்.பி. சாரதி

குருநாதரிடம் நடந்ததைக் கூறி, "ஸ்வாமி! தங்களைக் கஷ்டப்படுத்தும் இந்தக் குஷ்டம் தீர வேண்டும் என்று வரம் கேட் கட்டுமா?" என்று பணிவுடன் கேட்டான்.

அவ்வளவுதான்! வேத தர்மர் ரௌத்ரா வேசமாகி விட்டார்.

"போ என்றாலும் போய்த் தொலை யாமல் கழுத்தறுக்கிறாய்! இந்தப் பாவத்தை இப்போதே அனுபவிக்காது போனால் வட்டி சேர்த்து இதைவிடப் பெரியதாக வரும் என்பது தெரியாத மூடனாக இருக் கிறாயே! உனக்கு வெறுப்பாக இருந்தால் ஒதுங்கிக் கொள். உன் தயவில் இந்தக் கர்மம் தொலைவதை நான் விரும்ப வில்லை!" என்று எரிந்து விழுந்தார்.

தீபகன் பரம்சிவனிடம் போய், "ஒரு வரமும் வேண்டாம்" என்று சொல்லி விட் டான்.

சிவபெருமான் மகாவிஷ்ணுவிடம் "அவனவன் வருஷக்கணக்கில் வரம் பெறத் தவமிருக்கிறான்; யாக ஹோமாதி களைச் செய்கிறான். வேத தர்மனின் சீட னான தீபகன் 'குரு உத்தரவில்லாமல் வரம் வாங்க மாட்டேன்' என்கிறான். இப்படி ஒரு குரு பக்தியா!" என்று ஆச்சரியப் பட்டார்.

மகாவிஷ்ணுவும் தீபகனைக் காண மணிகர்ணிகை வந்தார். வரம் தருவதாகக் கூறினார்.

"ஏன் இப்படி நீங்கள் இருவரும் நிர்ப் பந்தம் செய்கிறீர்கள்? குரு சேவை எனக்கு மனத் திருப்தியைத் தருகிறது. பிரதிபலன் எதிர் பார்த்து நான் தொண்டு செய்ய வில்லை" என்றான் தீபகன்.


"தீபகா! அதுதான் உபகாரத்தின் பெருமை. உன் குருவின் மனதைப் பார்" என்றார் ஸ்ரீஹரி.

குரு தன்னை சோதிக்கவே வியாதியை ஏற்படுத்திக் கொண்டு குருடனாகவும் முடவனாகவும் நடிக்கிறார் என்பது தீபகனுக்குத் தெரிந்தது.

அதே சமயம் தீபகனை இனியும் சோதிப்பதில்லை என்ற உறுதியோடு வேத தர்மரும் பூரண தேஜஸுடன் கம்ப னேஸ்வரர் சன்னதிக்கு வந்தார்.

தீபகனால் சிவ - விஷ்ணு தரிசனம் பெற்றார். சீடனுக்கு அஷ்டமா சித்திகளை யும் கற்றுக் கொடுத்தார். 'கோபமும் ஆசை யும் அற்ற, பொறுமையே வடிவான, குருவின் மேல் அபார பிரேமை கொண்ட தீபகனின் குணங்கள் இந்த இடத்தில் நீராடுபவருக்கு வரும், என்று சங்கர - நாரா யணர் ஆசி அளித்தனர்.

நவநிதிகளும் பெற்று அமோகமான புக ழோடு வாழ்ந்தான் தீபகன்.



கழுதைகள் எத்தனை?

முத்தையன் ஒரு முட்டாள் பேர்வழி. அவன் தந்தை பணம் கொடுத்து ஒன்பது கழுதைகளை சந்தையிலிருந்து வாங்கி வரச் சொன்னார்.

முத்தையனும் சந்தையை அடைந்து ஒன்பது கழுதைகளை வாங்கினான். சிறிது தூரம் நடந்ததும் கால் வலித்தது. ஒரு மரத்தடியில் கழுதைகளுடன் அமர்ந்தான்.

அந்த வழியே வந்த ஒருவர், "ஏம்ப்பா இப்படி உட்கார்ந்திருக்கே? இத்தனை கழுதை இருக்கே. ஏறி உட்கார்ந்து போகலாமே!" என்றார்.

உடனே முத்தையன் ஒரு கழுதை மேல் அமர்ந்து முன்னால் சென்றான்.

எட்டு கழுதைகளும் பின் தொடர்ந்தன. சிறிது தூரம் சென்றதும் கழுதைகள் பத்திரமாக வருகிறதா? என்று திரும்பிப் பார்த்தான்.

ஒவ்வொரு கழுதையாக எண்ணினான். எட்டு கழுதைகள்தான் இருந்தன. திடுக்கிட்டுக் கீழே குதித்தான். மீண்டும் ஒருமுறை எண்ணினான். ஒன்பது கழுதைகள் இருந்தன.

திருப்தியுடன் கழுதை மேல் அமர்ந்து சென்றான். சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்து எண்ணினான். எட்டு கழுதைகளே இருந்தன. மறுபடியும் கழுதையிலிருந்து இறங்கி எண்ணினான். ஒன்பது கழுதைகள் இருந்தன.

'இது என்னடா விசித்திரம்? உட்கார்ந்து எண்ணினால் ஒன்று குறையுது. இறங்கினால் சரியாக இருக்கே!' என்று வியந்தான்.

'அப்பாவை உட்கார்ந்து எண்ணச் சொல்லக் கூடாது. நின்றபடிதான் எண்ணச் சொல்லணும்' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

ஊரை நெருங்கும் நேரத்தில் முத்தையனின் நண்பன் வந்தான். முத்தையன் நடந்ததை விவரித்தான்.

"முத்தையா இந்தக் கண்டுபிடிப்பிற்கு உனக்குப் பட்டம் தரலாம்" என்றான் நண்பன் கிண்டலாக.

"என்ன பட்டம்டா?"

"உலக மகா முட்டாள் பட்டம்தான்!" என்று கூறிய நண்பனை முத்தையன் துரத்தினான்.

— ஜெ. சாமுவேல் அருண்குமார்,
கடலூர்

கோகுலம் நியூஸ்!



பார்வை

இதுவரை விபத்து, ரசாயன பாதிப்பு, நோய் ஆகியவற்றின் மூலம் பார்வை இழந்தவர்களுக்கு மட்டுமே கண் அறுவை சிகிச்சை செய்து பார்வையைத் திரும்ப பெற முடிந்தது. ஆனால் இப்போது பிறவியிலேயே கண் பார்வையற்றவர்களுக்கும், பார்வை நரம்பு அல்லது ரெட்டினா பாதிக்கப் பட்டவர்களுக்கும்கூட அறுவை சிகிச்சை செய்து பார்வையைத் திரும்பப் பெறச் செய்ய முடியும் என்கிறார்கள் வாஷிங்டனைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள்.

தடையல்ல!

சாதனைக்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதை நிரூபித் திருக்கிறார்கள் உயரம் குறைந்தவர்கள். 2 முதல் 3 அடி உயரம் இருக்கும் இவர்கள் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியில் மற்றவர்களைப் போல் அற்புதமாக விளையாடினார்கள்.

டால்பின்கள் பரிதாபம்!

புத்திக் கூர்மை மிக்க டால்பின்கள் தூத்துக்குடி கடல் பகுதியிலும் வசிக்கின் றன. ஜூன் மாதம் இறுதியில் நாற்பதுக் கும் மேற்பட்ட டால்பின்கள் வயிறு வெடித்து இறந்து போய் கரையில் ஒதுங் கின. கடலில் மீன்களைப் பிடிக்க குண்டு வீசிய சிலரின் செயலால் டால்பின்கள் இறந்திருக்கக் கூடும் என்று கருதப்படு கிறது.

மிதக்கலாம்!


பாராசூட்டில் வானில் மிதந்து இறங்க உங்களுக்கு ஆசையா? கவலை வேண்டாம். சென்னையில் பாராசூட் மையம் ஒன்று ஆரம் பிக்கப் பட்டுள்ளது. இதில் கட்டணம் செலுத்தி பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பாராசூட் பயன் படுத்தி மகிழலாம்.

தீ

ரஷ்யாவில் இது வரை காணாத அள விற்கு வெப்பநிலை நிலவுகிறது. இத னால் அங்குள்ள பசுமையான காடு கள் தீப்பற்றி எரிகின் றன. காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் அந்நாட்டு ஆராய்ச்சியாளர்கள்.

சுற்றுலா!

ஊர் விட்டு ஊர், நாடு விட்டு நாடு சுற்றுலா பயணம் செய்வதைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். அமெரிக்க வானியல் ஆராய்ச்சியாளர்கள் பயணிகளை விண் வெளிக்கு சுற்றுலா அழைத்துப் போக தயாராகி வருகிறார்கள். இதற்காக விண் வெளியில் ஒரு ஹோட்டல் கட்டப் பட்டு வருகிறது. அமெரிக்க வர்த்தகர்களும் பொதுமக்களும் இச் சுற்றுலாவை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார்கள். இப்பொழுதே பயணி களிடம் கடும் போட்டி நிலவி வருகிறது.




அடியே, ரமா...
சனியனே எங்கேடி போனே?
ராமு, ஏன்டா எப்பவும் கோபமாவே பேசறே?
அவ பண்ற விஷமம் எல்லாம் உங்க கண்ணுக்குத் தெரியாதும்மா..
கோபம்
கதை: பா.கவிதா
படம்:
ஒரு நாள் அந்த வட்டாரத்தில் உள்ள மூதறிஞர் ஒருவரிடம் ராமுவை அழைத்துச் சென்றாள், அம்மா~
என் மகனின் கோபத்துக்கு ஒரு வழி சொல்லுங்க தாத்தா!
நீ எல்லார் கிட்டேயும் சிடுசிடுன்னு தான் பேசறே! ...சரி வா, சாப்பிடலாம். சாப்பிடாம கோபத்தோட படுக்கப் போகாதேடா.
எனக்கு ஒண்ணும் வேண்டியதில்லை...
சரி... இனிமே ராமு என்ன சொன்னாலும் அது அப்படியே பலிக்கும்!
ஐயோ! ஏதாவது தவறாகி விட்டால்..!
அதுதான் ஒரே வழி!


ஏமா குடிக்கத் தண்ணி கொண்டுவா.
நீயே போய் எடுத்துக்க ராமு. நான் வீட்டுப் பாடம் முடிக்கறேம்.
பொல்லாத பாடம்..
ஏன் டோ சியன். உனக்குக் காலா இல்லை!
ஆமா எனக்குக் கால் இல்லை!
மறுவினாடி ராமு எழுந்த போது—
என் கால்!
ஐயோ.. என் கால்! ... காலை அசைக்க முடியல..
காலுக்கு என்னமோ ஆச்சு...
என் கால் போச்சு!
கோபத்தோட போய் தூங்கினா இப்படித்தான் கெட்ட கனவு வரும். காலைப் பார். நல்லாத் தான் இருக்கு!
ஓ.. வெறும் கனவா?
அம்மா இனிமே கோபப் படவே மாட்டேம்மா!
குட் பாய்!

உழைப்பும் மகிழ்ச்சியும்!

குமார் செல்வந்தர் வீட்டுப் பையன். கார், பங்களா, வேலையாட்கள் என மிகுந்த வசதியில் வாழ்பவன். குமாரின் தேவைகளைக் கவனிப்பதற்காகவே வேலையாட்கள் எப்போதும் தயாராக இருந்தனர். அதனால் எதற்கெடுத்தாலும் பிறருடைய உதவியை எதிர்பார்த்துப் பழகிப் போன குமாருக்கு சோம்பேறித்தனமும் பிறர் உழைப்பில் தான் சுகமாக இருக்கும் எண்ணமும் ஊறிப் போய் இருந்தது.

குமாருக்குக் காலை ஒன்பது மணிக்கு பள்ளி என்றாலும் எட்டு மணிக்கு மேல் தான் படுக்கையை விட்டு எழுவான். உடனே சூடாகக் காபி தயாராக இருக்க வேண்டும். குளியல் அறையில் பேஸ்ட், பிரஷ் ரெடியாக இருக்க வேண்டும். குளித்து விட்டு வருவதற்குள் அன்றைக்கு என்ன உடை என்று வேலையாட்கள் தெரிந்து எடுத்து வைத்திருக்க வேண்டும். புத்தகங்களை அடுக்கி, காலணிகளுக்கு பாலிஷ் போட்டு வைக்க வேண்டும். உணவு மேசையில் அவனுக்குப் பிடித்த நான்கு சிற்றுண்டிகள் தயாராக இருக்க வேண்டும். இதில் எதில் குறையேற்பட்டாலும் கோபத்தில் வேலையாட்களை கண்டபடி குமார் திட்டுவான். இவ்வளவு செய்தும் பள்ளிக்கு அவசர அவசரமாகவே புறப்படுவான். பள்ளியில் புத்தகம் மற்றும் பயிற்சி ஏடுகளை மறந்து விட்டு வந்து ஆசிரியரின் கோபத்திற்கு ஆளாவான். எந்த ஒரு வேலையையும் குமாரால் தன்னிச்சையாகச் செய்ய முடியாது.

ஒருநாள் திடீரென்று ஊரில் இருக்கும் தாத்தாவிற்கு உடல்நலம் சரியில்லை என்று அவசரச் செய்தி வந்தது. அவன் அப்பா, அம்மா இருவரும் அவனை வேலையாட்களின் பொறுப்பில் விட்டு விட்டு ஊருக்குச் சென்று விட்டனர்.


மறுநாள் காலை குமார் படுக்கையை விட்டு எழுந்தபோது எட்டரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. குமாரின் பெற்றோர் ஊரில் இல்லாததால் வேலையாட்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்யவில்லை. கோபித்துக் கொண்டு அவர்களைத் திட்டினான். அவர்கள் அதையே சாக்காக வைத்துக் கொண்டு குமாரை நெருங்குவதற்குப் பயப்படுவது போல் நடித்துக் கொண்டு அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. சனி, ஞாயிறு விடுமுறையை குமார் தன் அத்தை வீட்டில் கழிக்க முடிவு செய்து கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான்.

இரவு வெகு நேரம் குமார் தன் அத்தை மகன் தமிழ்ச்செல்வனுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு தூங்கப் போனான். புது இடம் ஆதலால் தூக்கம் சரியாக வரவில்லை. ஆகவே வழக்கத்திற்கு மாறாக குமார் அதிகாலையில் எழுந்து விட்டான். படுக்கையில் தமிழ்ச் செல்வனைக் காணவில்லை. குமார் எழுந்து சென்று அத்தையிடம் கேட்டான். அதற்கு அத்தை, "காலை ஐந்து மணிக்கே எழுந்து அவன் அப்பாவுடன் தோட்டத்துக்குப் போயிருக்கான்" என்றார்.

குமாரும் தோட்டத்துக்குச் சென்றான். தோட்டத்தில் வேலையாட்களுடன் தமிழ்ச்செல்வனும் அவன் அப்பாவும் சேர்ந்து வெட்டிப் போட்ட தேங்காய்களை லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தனர். ஏழு மணிக்கு அந்த வேலை முடிந்தது. தமிழ்ச் செல்வனைத் தோட்டத்துக்குத் தண்ணீர்ப் பாய்ச்சச் சொல்லிவிட்டு தேங்காய்களுடன் லாரியில் சென்று விட்டார் அவன் அப்பா.

தயங்கித் தயங்கி குமார் தமிழ்ச்செல்

வனுக்கு சிறு உதவிகள் செய்தான். காலை எட்டு மணிக்கு காலைச் சிற்றுண்டி இருவருக்கும் தோட்டத்திற்கே வந்தது. வழக்கம் போல் பல வகையான சிற்றுண்டி இல்லை என்றாலும் முதல் நாள் சரியாகச் சாப்பிடாததாலும் காலையில் கொஞ்சம் வேலை செய்ததாலும் இயற்கை சூழ்நிலையில் சாப்பிட்டது அமிர்தமாக இருந்தது குமாருக்கு.



சிற்றுண்டி முடிந்ததும் தமிழ்ச்செல்வன் தொடர்ந்து தோட்ட வேலையில் ஈடுபட்டான். தமிழ்ச் செல்வனுடன் வேலையாட்கன் பழகும் முறைக்கும் தன்னுடைய வீட்டு வேலையாட்கள் பழகும் முறைக்கும் இருந்த வேறுபாட்டைக் குமார் கண்டான். இங்கே உழைப்பில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். தமிழ்ச் செல்வன் ஒவ்வொரு வேலைக்காரரிடமும் பாசத்துடனும் பிரியத்துடனும் நடந்து கொண்டான். அதனால் அவர்களும் அவனிடம் உண்மையான அன்பைச் செலுத்தினார்கள்.

காலை பதினோரு மணி அளவில் வேலை முடிந்தது. வேலையாட்கள் தமிழ்ச் செல்வனிடம் சிரித்துப் பேசி மகிழ்ந்தனர். மனம் விட்டுச் சிரித்த அந்த மகிழ்ச்சியை குமார் இதுவரை கண்டதில்லை. குமாரும் தன்னை மறந்து அவர்களோடு ஒன்றிக் கொண்டான்.

அன்பு, பாசம் என்ன என்பதையும் உழைப்பு மகிழ்ச்சி தருவதையும் புரிந்து கொண்ட குமார் புது மனிதனாக ஞாயிற்றுக் கிழமை மாலை ஊருக்குத் திரும்பினான்.

— பா. ஆனந்தகுமார், எட்டாம் வகுப்பு, எஸ்.பி.எம். பள்ளி, திண்டுக்கல்.



• மகிழ்ச்சியில் ஆஸ்திரேலிய வீரர்கள்

கிரிக்கெட்டில்

'Anything's possible; Cricket is a funny game' என்று கிரிக்கெட் வர்ணணையாளர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. அதை நான் நிஜமாக பார்த்தது தென் ஆப்பிரிக்கா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில்தான். ஒரே ஒரு ரன் எடுக்க முடியாததால் ஆட்டம் 'Tie' ஆகி, இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை தென் ஆப்பிரிக்கா இழந்தது. தென் ஆப்பிரிக்காவின் இன்னிங்ஸ் தொடங்கியதிலிருந்தே வெற்றி - தோல்வி நிலை மாறி, மாறி ஏற்பட்டது. ஆட்டத்தின் கடைசி ஓவர்களில் லான்ஸ் குளூஸ்னரின் அபார ஆட்டத்தினால் அணி வெற்றிக்கனியை எட்டும் நிலையில் இருந்தது.

மீதமிருப்பது 6 பந்துகள்; எடுக்க வேண்டியது 9 ரன்கள். கடைசி ஓவரின் முதல் இரண்டு பந்துகளைப் பவுண்டரிக்கு அனுப்பினார் குளூஸ்னர்.

இப்போது 4 பந்துகள்; வெற்றி பெறத் தேவை ஒரே ஒரு ரன். முதல் பந்தில் ரன் எடுக்க முடியவில்லை. பதட்டம் தொடங்குகிறது.

இன்னும் 3 பந்துகள்: தேவை ஒரே ஒரு ரன். குளூஸ்னர் அடிக்கிறார். எதிரே இருக்கும் டோனால்ட், பந்து போதிய தூரம் செல்லவில்லை என்று கருதி ஓடாமல் நிற்கிறார். அதைப் பதட்டத்தில் பார்க்காமல் குளூஸ்னர் ஓடி... அதை தாமதமாக பார்த்துப் புரிந்து கொண்டு டோனால்ட்



• ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ் வாஹ்



• பிளெமிங், மெக்ராத்

ஓடி... ரன் அவுட் நிகழ்ந்து விடுகிறது.

டோனால்ட்தான் பத்தாவது விக்கெட். இன்னும் இரண்டு பந்துகள் இருந்து என்ன பயன்? இந்த ஆட்டம் 'Tie' யில் முடிகிறது. ஏற்கெனவே நிகழ்ந்த 'சூப்பர் சிக்ஸ்' போட்டியில் தென் ஆப்பிரிக்காவை ஆஸ்திரேலியா வீழ்த்தியது. அதன் காரணமாக ஆஸ்திரேலியா இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுகிறது. பாகிஸ்தானுடன் இறுதிப் போட்டி.


இதுதான் இறுதிப் போட்டியா?

எதுவும் நடக்கலாம்!

பாகிஸ்தானுடன் இறுதிப் போட்டி. அரை இறுதியில் தென் ஆப்பிரிக்காவை நூலிழையில் வென்றதில் மிக உற்சாகமாக இருக்கிறார்கள் ஆஸ்திரேலிய வீரர்கள். 'நாங்கள் வெல்வோம்' என்று கவிதையெல்லாம் எழுதுகிறார்கள். பாகிஸ்தான் இன்னிங்ஸ் தொடங்குகிறது. என்ன இது? மளமளவென்று விக்கெட்டுகள் சரிகின்றன. 132 க்கு ஆல் அவுட்டா? நம்பமுடியவில்லை! உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளில் இதுதான் மிகக் குறைந்த ஸ்கோர். ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் தொடங்குகிறது. பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் மளமளவென்று விக்கெட்டுகளை வீழ்த்தி 'பதிலடி' கொடுக்கப் போகிறார்களோ? ம்ஹூம்! ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது! 'கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம்' என்பதற்கு மிகச் சிறந்த உதாரணங்கள் இந்த இரண்டு ஆட்டங்கள்தான்.



• வாசிம் அக்ரம்



• ஷேன்வார்ன்

உலகக் கோப்பை நாயகன் லான்ஸ் குளூஸ்னர்:

"இதில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால்



• குளூஸ்னர்

நாங்கள் எதற்காகச் சென்றோமோ அதை அடைய முடியவில்லை என்பதுதான் வருத்தமளிக்கிறது" என்கிறார் தென்



• பயஸ், பூபதி

ஆப்பிரிக்காவின் லான்ஸ் குளுஸ்னர். 281 ரன்கள்; 17 விக்கெட்டுகள் - இது 27 வயது குளுஸ்னரின் உலகக் கோப்பை சாதனை. தென் ஆப்பிரிக்காவை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் செல்லத் தேவையான ஒரே ஒரு ரன்னை எடுக்க முடியவில்லை என்பதில் குளுஸ்னருக்கு மிகுந்த வருத்தம். எனினும் இத்தொடரில் அவரது ஆட்டம் அபாரமானது. வாழ்த்துகள்.

சபாஷ், பயஸ் - பூபதி!

உலகக் கோப்பை கிரிக்கெட் கோலாகலத்தில் இதை யாரும் கண்டு கொள்ளவில்லை. ஆமாம். ஒரு இந்திய ஜோடி முதன் முறையாக பிரெஞ்சு ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் இரட்டையர் போட்டியில் வெற்றி பெற்றிருக்கிறது. லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடிக்கு இது மிகப் பெரிய வெற்றி.


இதுவரை பதினான்கு 'இரட்டையர் சாம்பியன் ஷிப்'களில் இந்த ஜோடி வெற்றி பெற்றிருக்கிறது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஏடிபி ஓபன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றது குறிப்பிடத் தக்கது.

டென்னிஸ் வீரர்கள் செய்து முடிக்க வேண்டிய வாழ்நாள் சாதனையாகக் கருத்தப்படுவது விம்பிள் டனில் வெல்வதுதான். அதையும் பயஸ் - பூபதி ஜோடி ஜூலை நான்காம் தேதி நடைபெற்ற விம்பிள்டன் இறுதிப் போட்டியில் சாதித்தது. இது ஒரு மகத்தான வெற்றி. இந்தியாவில் முதல் முறையாக விம்பிள்டன் பட்டம் வென்ற லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஆகியோருக்கு நம் நல்வாழ்த்துகள்!


— விளையாட்டுப் பையன்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623 ; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

வண்ணம் தீட்டுங்கள்



ஐந்து
வித்தியாசங்களைக்
கண்டுபிடியுங்கள்!



விடை: 1. ரிப்பன் 2. பொட்டு 3. சாக்ஸ்
4. பை. 5. வாட்டர் பேக்





''பாத்திரக்கடையில் வேலை பார்த்து எப்படி முன்னுக்கு வந்தாய்?''

''நம்பிக்கைக்குப் 'பாத்திரமா'க நடந்து கொண்டேன்!''

– எஸ். மோகன்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

